பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஆனி 14 றஜப் 10 இதழ்: 137
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28-6-77

# வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம்!

## கடைசிநேரத்திலும் சமரச முயற்சி

யாழ்ப்பாணம், செவ். நாட்டிலுள்ள சகல வங்கி ஊழியர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட இலங்கை வங்கிஊழியர் சங்கம் இன்று வேலைநிறுத்தம் செய்வதென ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

திறைசேரி உத்தியோகத்தர் வங்கி நிர்வாக உத்தியோகத்தர்களைக் கொண்ட கமிட்டி மே மாதம் 31-ந் திகதி அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தவறியதைத் தொடர்ந்தே வங்கி ஊழியர் வேறு வழியின்றி வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளதாக வங்கி ஊழியர் ஒருவர் தெரிவித்தார்

1970-ம் ஆண்டுடன் முடிவடைந்த கூட்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டதை தொடர்ந்து 2 சம்பள உயர்வு கோரிக்கையை முன்வைத்து 72-ம் ஆண்டு வேலைநிறுத்தத்தில் குதித்தார்கள் என்றும் நிதி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா விட்ட இடத்திலேயே இருந்து பேச்சுவார்த்தை ஆரம்பிக்க முன்வந்தாரென்றும் வங்கி ஊழியர் ஒருவர் தெரிவித்தார்

அமைச்சர் பீலிக்ஸ் திறைச்சேரி, வங்கிநிர்வாக உத்தியோகத்தர்களைக் கொண்ட கமிட்டி ஒன்றை உருவாக்கி இவ்வருடம் மே 31-ம் தேதிக்கு அறிக்கைசமர்ப்பிக்குமாறு பணித்திருந்தார் என்றும், ஆனல் அக்கமிட்டி. இதுபற்றி அக்கறைகாட்டவில்லை யெனறும் அவர்விளக்கினர்.

இந்த இழுபறிநிலையைத் தொடர்ந்து இலங்கை வங்கி ஊழியர் சங்கம் கடந்த 18-ம் தேதி கூடி வேலைநிறுத்தம்செய்வதெனமுடிவு எடுத்துள்ளது எனறும் அவர்கூறினர்.

நிலைமை இவ்விதமாக இருந்த போதிலும், வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்வதை தடுக்க கடைசிநேர சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக நிதி அமைச்சுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## வழமைபோல் மின் விநியோகம் - அமைச்சின் செயலாளர்

கொழும்பு, திங்கள் வேலைநிறுத்தம செய்துவந்த சகல மின்சாரசபை ஊழியர்களும் தமது வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு இன்று காலை வேலைக்குத் திரும்பினர்.

இத் தகவலை நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் திரு. ரி. சிவஞானம் தெரிவித்தார்.

நேற்றுமாலை நீர்ப்பாசன மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. மைத்திரி பாலசேனநாயக்காவுக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையேநடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது ஏற்பட்ட இணக்கத்தை அடுத்தே சகல ஊழியர்களும் இன்று வேலைக்குத் திரும்பினர்.

கொழும்பில் இன்று வழமைபோல்மின்விநியோகம்செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்த திரு. சிவஞானம்' நாடு முழுவதும் சீரான மி. விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தன்ர்

### 'பழிவாங்கக் கூடாது'

கொழும்பு, திங். வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்களைப் பழிவாங்கக் கூடாதென இலங்கை மின்சார தொழிற்சங்க கூட்டணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் கோரியுள்ளது.

சபைத்தலைவர் திரு. சந்திரசிங்க பதவிநீக்கம் செய்யப்பட்டது முறையல்லஎன்றும் புதிய தலைவராகப் பதவியேற்பவர் சபை உறுப்பினராக இருப்பவராக இருக்கவேண்டுமென்றும் அவர்தம்கோரிக்கைகளைவழங்க வேண்டுமென்றும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அமைச்சர் நன்றி

இதேவேளை வேலைநிறுத்த வேளை ஒத்துழைப்பு வழங்கிய ஊழியர்களுக்கு நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைப்பு அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயகா நன்றி தெரிவித்துள்ளார்.

பாண்டிச்சேரியில்

# பெரும்பான்மைபலத்தை நிரூபிக்க எம்.ஜி.ஆர். கட்சிக்கு நாளைவரை அவகாசம்

## பிரிந்தவரை சேர்க்க நடந்த முயற்சி தோல்வி

சென்னை, ஜுன் 27 பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் அமைச்சரவை அமைப்பதற்கு பெரும்பான்மை சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவு உண்டு என்பதனை உறுதிப் படுத்துவதற்கு பாண்டிச்சேரி கவர்னர் திரு' குல்கர்ணி அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாண்டிச்சேரி சட்டசபை தலைவர் திரு. இராமசாமிக்கு நாளைமாலைவரை அவகாசம் அளித்துள்ளார்.

### மேலும் அவகாசம் கேட்டால்...

இதுபற்றி இன்று சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்த திரு. குல்கர்ணி, அ இ.அ.தி. மு. க. இது தொடர்பாக மேலும் அவகாசம் தேவை என்று கேட்டால மத்திய உள்துறைஅமைச்சரின் ஆலோசனையைத் தாம் நாடவேண்டி வரும்' என்று சொன்னர்.

கூடிய விரைவில் மக்களாதரவுடனை ஆட்சி ஒன்றினை பாண்டிச்சேரியில் அமைப்பதில் தாம் அக்கறை கொண்டிருப்பதாகவும் அவர் கூறினர்.

### சமரச முயற்சி தோல்வி

இதேவேளை, நேற்று பாண்டிச்சேரி அ. இ. அ. தி. மு. க. அமைப்பாளர் பதவியில் இருந்து ராஜினமாச் செய்த திரு. டி. இராமச்சந்திரனை மீண்டும் கழகத்தில் சேர்ந்து ஒத்துழைக்குமாறு கழகத் தலைவர்களில் ஒருவரான திரு. ஆர். எம். வீரப்பன் அவரை நேற்றிரவு சந்தித்து கேட்டுக் கொண்ட போது அவர் அதற்கு இணங்க மறுத்து விட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

திரு. டி. இராமச்சந்திரனின் முடிவில் எவ்வித மாறுதலும் இருக்காது என்று அவருடன் நெருங்கிய ஒருவர் தெரிவித்தார். (உ)

## விசாரணைப் பொறுப்பு இவர்களிடம்

புதுடில்லி, ஜுன் 27 திரு சஞ்சேய் காந்தியின் மாமனர் லெப்டினென்ட் கேர்ணல் ஆனந்த் மரணமான சந்தர்ப்பம் குறித்து ஆராயும் பொறுப்பு மத்திய புலனுவத் துறையினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக இன்று லோக் சபாவில் கேட்கப்பட்ட அவசர கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் தெரிவித்தார்' (உ)

'ஐக்கிய தேசியக்கட்சி

## கூட்டணியின் ஆலோசனையுடன் மொழிப்பிரச்னையை தீர்க்கும்'

யாழ்ப்பாணம். செவ் 'இலங்கையில் வாழும்சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்குமிடையில் நிலவும் மொழி சம்பந்தமான பிரச்னைக்குத் தீர்வுகாண்பதில் ஐக்கியதேசியக் கட்சி அரசை, அமைத்த உடன்கவனம் செலுத்தும்.' நெடுந்தீவு' மேற்கு ஐக்கிய தேசியக் கட்சிக் கிளையின் திறப்பு விழா வைபவத்தின் போது உரையாற்றிய ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர் திரு. ம. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ''தென்னிலங்கையிலுள்ளமுற்போக்குச் சக்தியாக புதிய ஜனநாயக சோசலிஷத்தின் அடிப்படையில் ஐ. தே. கட்சி மலர்ந்துள்ளது. எனவே பாராளுமன்ற ஜனநாயகத்தில் அதிக நம்பிக்கை கொண்டுள்ள எனதுகட்சி தமிழரின் மொழிப் பிரச்னையை கூட்டணியின் ஆலோசனையைப்பெற்று விரைவில் தீர்த்துவைக்கும்.

## விசாரணை பூர்த்தி

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் சிசு ஒன்று காணமல் போனது தொடர்மாக நடந்த விசாரணை பூர்த்தியடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் வைத்திய அத்தியட்சகரும் பொலிசாரும் சேர்ந்து இவ்விசாரணையை நடத்தினர்கள்.

இவ்விசாரணை விபரம், வைத்தியப்பகுதித் . தலைமைப்பீடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## தேடுதல் முயற்சி தொடர்கின்றது

கொழும்பு, திங். சிவனெளிபாத மலையில் இருந்து தள்ளி வீழ்த்திக் கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஜெர்மன் பேராசிரியரின் உடலை கண்டு பிடிக்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது.

பேராசிரியருடையது எனக் கருதப்படும் திறப்பு கோர்வை ஒன்றும் படம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அடர்ந்த காடாக குறிப்பிட்ட பகுதி இருப்பதாலும், குளிர் மிகுந்துள்ளதாலும் தேடுதல் நடத்துவதில் பொலிசாருக்கு சிரமம் ஏற்பட்டுள்ளதாம்.

பேராசிரியரது மர்மமறைவு தொடர்பாக ஏற்கனவே இருவர் சந்தேகததின் பேரில் கைதாகியுள்ளனர்: ஹிக்கடுவையைச் சேர்ந்த மேலும் நால்வர் தேடப்படுகின்றனர். (ம உ)

கைதடி

## இலங்கை சைவ அநாதை இல்லம் தர்ம இல்லமாகிறது

யாழ்ப்பாணம், செவ். கைதடி இலங்கை சைவ அநாதை இல்ல மேல்மாடித் திறப்பு விழாவும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் அடுத்த மாதம் 1ம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெறவிருக்கின்றன.

காலையில் மூதூர் நீதிபதி திரு. க. ஞானச்சந்திரன் தலைமையில் நிகழும் மேல்மாடித் திறப்பு விழாவில் சாவகச்சேரி சிவகுமாரன் நினைவு கூடங்கள், பலாலி தம்பையா நினைவு கூடம், கைதடி தம்பையா நினைவு மண்டபம் திறத்தலும் தாகசாந்தி நிலையத்திற்கு அடிக்கல் நாட்டுதலும் இடம் பெறும். பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரையாற்றுவார். யோகாசனஆசான் க. செல்வநாயகம், நாளுட்டான் முத்துமாரியம்மன் சைவ மகாசபை சி. சின்னையா ஆகியோர் உரையாற்றுவர். யாழ்ப்பாணம், சாவகச்சேரி திவ்ய ஜீவன சங்கத்தினரின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

மாலையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அநாதை இல்லத்தின் பெயர் தர்ம இல்லம் என மாற்றப்படும். இவ்வில்லத்தின் பெயரை 'இலங்கை சைவத் தரும இல்லம்' என மாற்றுமாறு சுவாமி சங்கராச்சாரியார், ஆதீனங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் கோரியுள்ளன. இக்கூட்டத்தில் அமைப்புவிதிகள் அங்கீகரித்தல், ஆட்சிக்குழுத் தெரிவு, கிராஞ்சி பழமுதிர் சோலையின் வளர்ச்சி, அ இ. சைவ எழுச்சி மாநாட்டைக் கொழும்பில் நடத்துதல், சைவத் தொண்டர் பயிற்சி முகாம் மற்றும் பல விஷயங்கள் பற்றி விரிவாகப் பரிசீலனை செய்யப்படும் [அ]

# ரயில்கள் மோதல்! இருபது பேர் காயம்

கொழும்பு, திங்கள் கம்பஹாவில் இன்று காலை இரண்டு ரயில்கள் மோதிக் கொண்டதில் 20 பேர் படுகாயமடைந்தனர்.

இவர்களில் சிலர் கம்பஹா கிராம ஆஸ்பத்திரியிலும், வேறு சிலர் கொழும்பு ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சரக்கு ரயிலும் பொல்காவலையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த பிரயாணிகள் வண்டியுமே கம்பஹாவுக்கும் கனேமல்லைக்கும் இடையே மோதிக்கொண்டன.

இவ்விபத்தினல் பிரதான பாதையில் ரயில்சேவைகள் சிறிதுநேரம் பாதிக்கப்பட்டன.

ரயில்வேப் பகுதி உயர் அதிகாரிகள் உடன் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

# 'ஜி. ஜியின் சம்மதத்துடனேயே கூட்டணியில் சேர்ந்தோம்

## காங்கிரஸ் தீர்மானத்தில் அவர் கையெழுத்தும் இருக்கிறது

### கூட்டணிக் கூட்டத்தில் 'சிவா' அளித்த விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்.

''தமிழர் விடுதலைக் கூட்டணி 1972ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி திருகோணமலையில் நடத்திய மகாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பாக தமிழ்க் காங்கிரஸ் செயற்குழு எடுத்த தீர்மானக் குறிப்பில் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் தமது கையெழுத்தை இட்டிருக்கிறார். எவருக்கும் சந்தேகம் இருந்தால் அதனை வந்து பார்த்துக்கொள்ள முடியும்.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயல் அதிபர்களில் ஒருவரும் நல்லூர் தொகுதியில் கூட்டணி சார்பில் போட்டியிடுபவருமான திரு. எம். சிவசிதம்பரம் கூறினார். யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. யோகேஸ்வரனை ஆதரித்து நடைபெற்ற கன்னாதிட்டி காளிகோவில் முன்னிலையில் திரு. கி. ஜெயராம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

''இந்த நாட்டில் தமிழ் இனம் இன்னல்பட்டபோதும், பல இழப்புக்களைக் கண்டபோதும் இந்த இனத்தின் விடுதலைக்காகப் போராடிய தொரு இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணிதான். இது ஒரு தேர்தல் கட்சியல்ல'' என்று கூறிய சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணி 1972 மே 22ந் திகதி திருகோணமலையில் ஆரம்பமானபோது அதில் கலந்துகொள்வது என தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூடி முடிவெடுத்து. இந்தத் தீர்மானத்தை நாம் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திடம் அவர் இலங்கைக்கு வந்தபோது அவரிடம் கையளித்தோம். அவர் அந்தக் குறிப்பில் கையெழுத்துப் போட்டுத்தந்தார். அந்தப் பத்திரம் இன்றும் எம்மிடம் இருக்கிறது. இதை எவரும் வந்து பார்க்கலாம். அது மட்டுமல்ல, நாம் நமது முதலாவது தேசிய மகாநாட்டினை வட்டுக்கோட்டையில நடாத்தியபோது நாம் நம்முடைய அணித் தலைவர்களாக அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம், அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. தொண்டமானையும் தலைவர்களாகத் தெரிவு செய்தோம். அப்போது அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் இந்த நாட்டில்தான் இருந்தார். அவர் கூட்டணிக் கொள்கையை ஏற்காவிட்டால் அவர் தமது பதவியை ராஜினமாச் செய்திருப்பாரே; எதற்காக அவர் தமது பதவியை ராஜினமாச் செய்யவில்லை என்பதை உணரவேண்டும். இந்த நாட்டில் தமிழ்த் தலைவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டு ட்ரயல்-அட்பார் விசாரணையின்போது அவர் தமிழ்த் தலைவர்களுக்காக தமது முழு வாதத்திறமையையும் காட்டி வாதிட்டதோடு தமிழ் ஈழக் கொள்கையை ஆதரித்து அவர் ஆற்றிய உரையை எவரும் மறந்திருக்கமாட்டார்கள்.



**மரியாதைக்கு ஒரு உதாரணம்**

நண்பன் குமாரசுவாமி இந்த நாட்டில் 7 ஆண்டுகள் அரசியல் துறவறம் மேற்கொண்டிருந்தார்.

நாம் இந்த 7 ஆண்டுகாலத்தில் எத்தனை போராட்டங்கள் நடாத்தினேம். அவற்றிற்கெல்லாம் மௌனமாக இருந்த அவர் இன்று புதிய காங்கிரஸ் அமைத்திருக்கிறார். அவர் ஜி. ஜி. பொன்னம்பலத்தில் எவ்வளவு மரியாதையும், மதிப்பும் வைத்திருந்தார் என்பதற்கு ஒரு உதாரணத்தை மட்டும் சொல்லலாம். 53-ம் ஆண்டு சேர். ஜோன். கொத்தலாவலையின் அரசவையில் 4 ஆண்டுகள் அரை மந்திரியாக இருந்தபோது திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் வெளியேற்றப்பட்டபோது தானும் வெளியேறவில்லை; மாறாக திரு. பொன்னம்பலத்தை வால் அறுந்த நரி என்று கூறினர். இன்று ஜி. ஜி. யின் பேரால் புதிய கட்சி அமைத்திருக்கிறார்.

**குமார் ஏன் கூட்டணி டிக்கட் கேட்டார்.**

தமிழர் விடுதலைக்கூட்டணியின் இயக்கம் தவறானது அது மக்களை ஏமாற்றுகிறது என்று கூறும் திரு குமார் பொன்னம்பலம் அப்படியானல் ஏன் எமது இயக்கத்தின் சார்பில் போட்டியிட முன்பு ரிக்கட் கேட்டார் அப்போது நமது இயக்கம் தப்பானதாகத் தெரியவில்லை? இம்முறை மக்கள், நீங்கள் எதிர்பார்க்கின்ற பூரண சம்மதத்தைத் தராவிட்டால் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்று குமார் கேட்கிறார். இந்தநாட்டில்கடந்த 7 ஆண்டுகளாகத் தீவிர போராட்டங்களிலும், நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதனல்நம்இளைஞர்கள் பலர்சிறைசென்றதைஇவர்கள் ஏன் மறந்துவிட்டார்கள். நாம் ஒரு தனிக்கட்சியல்ல, அத்தகையதொரு துர்ப்பாக்கிய நிலை வந்தால் எமது செயற்குழுகூடி ஒரு தீர்மானம் எடுக்கும் அந்த முடிவின்படி நாம் அனைவரும் நடப்போம்.

ஆனல் குமார் என்ன செய்யப்போகிறார் என்பதை மக்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் திரு. தொண்டமான் எஸ்ஞல் அவரும் திரு. செல்லச்சாமியும் ஏன் உதயசூரியன் கொடியில் போட்டியிடாது அவர்களது சேவல் கொடியில் போட்டியிடுகிறார்கள் என்று கேட்கிறார்கள் வடக்கு,கிழக்கு மாகாணங்களிலும் புத்தளத்திலும் போட்டியிடுகின்ற அபேட்சகர்கள் தான் தமிழர் விடுதலைக்கூட்டணியின் சின்னத்தில்போட்டியிடுகின்றர்கள். ஆனல்மலையக மக்களின் நிலைமைவேறு. தமிழ் பிரதேசங்களுக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவழி தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன் வைத்து எமது ஆதரவுடன் போட்டியிடுகிருகள். எனவே இத்தகைய பசப்பு வார்த்தைகளால் இனியும் தமிழினத்தை ஏமாற்றமுடியாது.

திரு. பொன். சத்தியசீலன் தமதுரையில், ''நாம் இதுவரை சந்தித்த தேர்தலை விட இந்தத் தேர்தலை ஒரு புதியகோணத்தில் நோக்குகின்றேம். 1803-ம் ஆண்டு இந்த நாட்டின் தமிழ் மன்னன பண்டாரவன்னியன் தனது ஆட்சி அதிகாரத்தை இழந்தான் அன்றிலிருந்துநாம் நமது உரிமைகளைப் படிப்படியாக இழந்து வந்துள்ளோம். இந்தநாட்டில் தமிழன் அரசியல் சுதந்திரங்கள் அற்றவனக வாழ்ந்து வந்ததுமட்டுமன்றி அண்மைக் காலங்களிலே உயிர் வாழக்கூட உலகம் அற்றவனக் கப்பட்டுத் தெருக்களிலே சுட்டு வீழ்த்தப்பட்டு இருக்கிறன். இந்தநிலைமாற தான்தமக்கென ஒரு தன்னட்சியை அமைத்து அந்தச்சுதந்திரத் தாயகத்திலே வாழ வேண்டும் என்ற அவாவோடு இம்முறைத் தேர்தலில் நிற்கினன் இந்தத்தேர்தல் தான் இந்நாட்டில் தமிழன் கடைசியாக வாக்களிக்கும் தேர்தலாக அமையும் அடுத்த தேர்தல்சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழ் ஈழத்தில் நடைபெறுகின்ற தேர்தலாக அமையட்டும்'' என்ருர்.

(கா)

---


## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம

வழக்கு இலக்கம் ஈடு/7306

மானிப்பாய் கோவில்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

வாதி

எதிராக

1. வேலன் நாகமுத்தனும் பெண்.
2. தங்கம்மாவும் இருவரும் சண்டிலிப்பாய்

பிரதிவாதிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/7306-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப் படி பின்னல் விபரிக்கப்படும் காணியும், பனைகளும், விடும், இணறும் 1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 4-ந் திகதி (1977-8-4) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிக்கு ருபா 1985/-உம் மேலும் ருபா 1500/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 4% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1965-ம் ஆண்டு பங்குனி மாதம் 19-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1966-ம் ஆண்டு தை மாதம் 26-ந் திகதி வரையுமான வட்டியும், அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ருபா 297/85 சதம் கொடுபடவேண்டும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சண்டிருப்பாயிறை ''தொக்குமான்கூல்'' நிலப்பரப்பு பதினெட்டும் (நிலபர 18) பனைகளும் எல்லை கிழக்கு ஏகாம்பரம் பெண் வள்ளியம்மையினுதனம் வடக்கு வைத்திலிங்கம் பெண் பொன்னம்மாவினுதனம், மேற்கு கார்த்திகேசர் பொன்னரின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைப்படி இது முழுவதும்.

சி. ஆ. த. வடிவேலு J. P.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.

"வடிவேல் உதயம்'',
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்,
17-6-1977.

6552



மலேஷியன் கைமார்க்
**சாம்பிராணி**
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
லிமிட்டெட்
கொழும்பு-10
போன்: 24261—5


---

# ''தமிழ் ஈழத்தில் முஸ்லிம்மக்களுக்கும் பாதுகாப்பு உண்டு''

## கொழும்பில் புத்தளக் வேட்பாளர்

கொழும்பு, திங்கள்

தமிழ் ஈழத்தில் முஸ்லிம் மக்கள் புனித குர்ஆனின் வழியில் வாழவும், தனித்துவமான தலைமையை ஏற்படுத்தவும் தமிழர் விடுதலைக் கூட்டணி பெருந்தன்மையோடு நமக்கு வழியமைத்திருக்கிறது. அதன் மூலமே இலங்கை முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு ஏற்படமுடியும்.

கொழும்பு மத்தியில் போட்டியிடும் திரு. எம். எஸ். செல்லச்சாமிக்கு ஆதரவாக கொழும்பு இளம் கலைஞர் முன்னேற்ற மன்றம் இ. தொ. கா. பணிமனையில் நடத்திய கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் புத்தளம் வேட்பாளர் டாக்டர் எலியாஸ் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தமிழர் விடுலைக் கூட்டணியில் தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றுடன் முஸ்லிம் ஐக்கிய முன்னணியும் அங்கம் வகிக்கிறது. இது வரைகாலமும் இலங்கை முஸ்லிம்களுக்கு சரியான ஒரு பாதை இருக்கவில்லை. திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவையும், திருமதி சிறிமாவோபண்டாரநாயக்காவையும் தலைவர்களாக ஒருகாலத்தில் ஏற்றேம். ஆனல் கடந்த ஆண்டு புத்தளம் பள்ளிவாசலில் நடைபெற்ற சம்பவமும், நாடு முழுவதிலும் நடைபெற்ற இன்னும்பல சம்பவங்களும் முஸ்லிம் மக்களின் மீது சிங்கள மக்கள் கொண்டுள்ள ஆதிக்கத்தைக் காட்டிவிட்டது. இவற்றைப் பற்றி தட்டிக் கேட்க அரசாங்கத்திலோ அல்லது எதிர்க்கட்சியிலோ ஒரு முஸ்லிம் எம். பியோ, சிங்கள எம். பியோ இருக்கவில்லை. ஒரேயொரு தமிழ் எம்.பி தந்தை செல்வா தான் இருந்தார்.

டொனமூர் ஆட்சுக்காலத்தில் மத்திய கொழும்பிலிருந்து தமிழர்களே உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். யுத்தத்தின் பின்னர் 1945-இல் சோல்பரிக்கமிஷன் கொழும்பு மத்தியை மூன்று அங்கத்தவர் தொகுதியாக்கியது.

1948-ல்பதந்திரம் பெற்ற பின்னர், இத்தொகுதியில் வாழும் ஏராளமான இந்திய வம்சாவழித் தமிழர்கள் திரு. பீட்டர்கெனமன் போன்றவர்களுக்கே வாக்களித்து வந்தார்கள். இந்திய வம்சாவழியினருக்காக அக்காலங்களில் திரு. கெனமன் பேசிவந்தார்.

1960-ல் இரு முஸ்லிம்களும் ஒரு சிங்களவரும் இத்தொகுதியிலிருந்துதேர்ந்தெடுக்கப்பட்டனர். 30 ஆண்டுகளாகத் தமிழர் எவருமே இத்தொகுதியிலிருந்து தெரியப்படவில்லை. 26 ஆயிரம் தமிழ் வாக்காளர்களைக் கொண்டிருந்தும் இந்நிலைமை இருப்பது தமிழ் மக்கள் வருந்தவேண்டிய விடயமாகும்.

நான் மார்க்ஸிஸ, லெனினிஸ சித்தாந்தங்களில் நம்பிக்கையுடையவனுக இருந்தபோதும் தந்தை செல்வாதான் ஒரே தலைவர்என்பதை அறிந்துகொண்டேன் இந்திய-பாகிஸ்தானிய குடியுரிமைக் கூட்டத்தின்போது தமிழ்க்காங்கிரசிலிருந்து பிரிந்து கொள்வது இந்திய வம்சவழியினருக்காக குரல்கொடுத்தார், திரு.செல்வநாயகம். இன்று, திரு செல்லச்சாமியை கொழும்பு மத்தியில் போட்டியிடவைத்து அவருக்கு ஆதரவு கொடுப்பதும் தந்தை செல்வா கட்டியெழுப்பிய கூட்டணியின் தியாகமேயாகும்.

''தமிழையே தாய்மொழி

[8ம் பக்கம் பார்க்க]

# எம். ஜி. ஆர். அமைச்சரவை பட்டியல்இன்றுவெளியாகும்

## தமிழக ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்படும்

(சென்னை)

தமிழ்நாட்டில் இம்மாதம் 30-ம் திகதி பதவி ஏற்று ஏற்கும் எம். ஜி. ஆரின் புதிய அமைச்சரவையின் பெயர் பட்டியல் இன்றுகாலை தமிழக ஆளுநர் திரு. பாபுதாஸ் பட்வாரியிடம் சமர்ப்பிக்கப் படும் என்று அ. இ. அ. தி. மு. க. எம். எல். ஏ. ஒருவர் தெரிவித்தார்.

அமைச்சரவையில் யார் யாரை சேர்ப்பது என்பது குறித்து நேற்று திரு. எம். ஜி. ஆர். தமது கட்சியின் மூதத தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினர்.

இதேவேளையில் புதிய சட்டசபை உறுப்பினர்கள் கூட்டம் ஒன்று நேற்று சென்னையில் நடைபெற்றது.

திரு. எம். ஜி. ஆர். 126 எம். எல். ஏ. க்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் 5 அ இ அ தி மு க. எம். பிக். களும் மேல்சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

புதிய அரசின் சமூக பொருளாதாரத் திட்டங்கள் பற்றி இக்கூட்டத்தில் கருத்துப் பரிமாறல் இடம்பெற்றதாகத் தெரிகிறது.

புதிய அரசின்மீது கிராம மக்களே அதிக நம்பிக்கை வைத்திருப்பதால் அவர்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்றவாறு அரசுசெயல்படவேண்டும் என்று இக்கூட்டத்தில் புதிய உறுப்பினர்கள் வற்புறுத்தியதாகவும் தெரிகிறது. (இ)

# உகண்டா நீதியமைச்சர் லண்டனில் அரசியல்தஞ்சம்

லண்டன், ஜூன் 27

உகண்டா நீதியமைச்சர் திரு. லூ பிரிட்டனிடம் அரசியல் தஞ்சம் புகுந்துள்ளார்.

எனினும் இவர் பிரிட்டனில் சொற்ப காலம்மட்டுமே தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்க முடியும் என்று பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த வாரம் உகண்டா ஜனதிபதி இடிஅமீனைக் கொலை செய்வதற்கு உகண்டாவில் முயற்சி நடந்ததாகவும் அப்போது அவரது சாரதியும், மெய்க்காப்பாளரும் கொல்லப்பட்டனர் என்றும் பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# அரசியலுக்கு மதப்பிரசாரம்: மொரார்ஜி கண்டனம்

சென்னை, ஜூன் 27

அரசியல் காரணங்களுக்காக மதப் பிரச்சாரம் செய்வது ஒரு பாரதூரமான மதவிரோதச்செயல் என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறியுள்ளார்

ஜம்முகாஷ்மீரில்நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

கடந்த காலங்களில் வகுப்புவாத தவருன கோஷங்களினல் மக்கள் துன்புறுத்தப்பட்டனர்; இனிமேல் இந்நிலை இருக்கக்கூடாது, இருக்கவும் மாட்டாது என்றும் திரு. மொரார்ஜிதேசாய் கூறினர்.

கடந்த அரசு மக்களுக்காகப் பணியாற்றியதா அன்றி தமது நன்மைகளுக்காக இயங்கிவந்ததா என்பதைமக்கள் உணர்ந்தறிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினர். (இ)

# யாழ் வளாகத்தில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செவ்.

இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகத்தில் நாளை புதன்கிழமை மாலை நடைபெறும் 'தென்னுசியவியற் கருத்தரங்கில், 'கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியின் மூதாதையர்கள்' என்னும் பொருள் பற்றி, திரு. ச. அம்பிகைபாகன் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிப்பார். (செ)

## நஷ்டஈடு

யாழ்ப்பாணம், செவ்

வடபகுதி துறைமுக றலிகுமாஸ்தாக்கள் கூட்டுறவுச்சங்கத்திற்கு 28586.ரூபா 82 சதம் நஷ்டஈடு வழங்கவேண்டும் என்று யாழ்.மாவட்ட கூட்டுறவுத் துறைமுகச் சமாசத்திற்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவுத் துறைமுகச் சேவைச்சமாசம் தனது அங்கத்துவச்சங்கமாகிய வடபகுதித் துறைமுக றலிகுமாஸ்தாக்கள் சங்கத்திற்கு வேலைவழங்காமல் மறுத்தமைக்காக வடபகுதிதுறைமுக றலிகுமாஸ்தாக்கள் கூட்டுறவுச்சங்கம், யாழ்மாவட்டகூட்டுறவுத் துறைமுகச் சேவை சமாசத்திற்கு எதிராக மத்தியஸ்ததீர்ப்புக்கு விடப்பட்டது. இந்த விசாரணை சமாசக்காரியாலயத்தின் மத்தியஸ்தர் திரு. சி. சின்னத்தம்பி முன்னிலையில் நடைபெற்றது. இளைப்பாறிய கூட்டுறவுப்பரிசோதகர் திரு. சரவணமுத்து சமாசசார்பிலும் இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர் திரு. வி. மயில்வாகனம் றலிகுமாஸ்தாக்கள் சார்பிலும் விசாரணைக்குச் சமுகமளித்தனர். (கா)

# வட இந்திய மக்கள் தென்னுட்டு மொழி ஒன்றையும் கற்கவேண்டும்

## இந்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் கூறுகிறர்

புதுடில்லி, ஜூன் 27

வடஇந்திய மக்கள் தென்னட்டு மொழிகளில் ஏதாவது ஒன்றைக் கற்கவேண்டும் என்று தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. எல். கே. அட்வாணி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

ஹிந்திமொழி பேசும் மக்களுக்கு ஆங்கில மொழியிலோ மற்றும் தென்னுட்டு மொழிகளிலோ எதுவித வெறுப்பும் இடையாது என்றும் திரு. அட்வாணி கூறினர். (இ)

## மெரினவில் எம் ஜி. ஆரின் கூட்டம்

சென்னை, ஜூன் 27

இம்மாதம் 30-ம் திகதி எம். ஜி. ஆரின் புதிய அமைச்சரவை பதவி ஏற்ற பின்னர் சென்னை மெரின கடற்கரை மைதானத்தில் மாபெரும்கூட்டம் ஒன்று நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

தியாகராச நகரில் உள்ள ஒரு பார்க்கில் இக்கூட்டத்தை நடத்த ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் பெருந்திரளான மக்கள் இக்கூட்டத்திற்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் இப்போது மெரின கடற்கரைக்கு கூட்டத்தைமாற்றி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் முதல் அமைச்சராக இருக்கும் திரு. எம். ஜி. ஆர். தமது புதிய அரசின் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துக்கூறுவார். (இ)

## சிறையில் தீ! 40 பேர் பலி!!

வாஷிங்டன், ஜூன் 27

அமெரிக்க சிறை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 40 கைதிகள் மரணமானர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

10 பேர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

சிறையில் திடீரென தீப்பற்றிக்கொண்ட போது அங்கு 80 பேர் இருந்தனராம்.

## மக்கள் விழிப்புத் தினம்

புதுடில்லி, ஜூன் 27

இந்தியாவில் திருமதி இந்திராவின் ஆட்சிக்காலத்தில் அமுல் செய்யப்பட்ட நெருக்கடி நிலையின் இரண்டாவது வருட நினைவுதினமான நேற்று நாடு முழுவதும் 'மக்கள் விழிப்பு தினம்' கொண்டாடப்பட்டது.

பல இடங்களில் பொதுக் கூட்டங்களும் கருத்தரங்குகளும் தீப்பந்த ஊர்வலங்களும் நடைபெற்றன. (இ)

# இலங்கையில் 5மாநில ராஜ்யங்கள் அமைத்தால்!

உடுப்பிட்டி, திங்கள்

''தலைமறைவாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற போர்வையில் நின்று தமிழ் இனத்தைப் பிளவுபடுத்தும் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சிகளின் இடத்திற்கு இலங்கைத் தமிழ் அரசியல் சுதந்திரக்கட்சி என்ற ஒரேயொரு தமிழ்க்கட்சியை ஸ்தாபித்துத் தமிழினத்தை ஒரே தேசியக் கட்சியின் கீழ் இணைப்பேன்.''

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் சட்டத்தரணி கந்தையாபிள்ளையினர் விடுத்துள்ள தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளார். கடந்த பொதுத் தேர்தலிலும் போட்டியிட்ட திரு.க.பிள்ளையினர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

- இலங்கையை ஐந்து மாநில இராச்சியங்களாகப் பிரித்து, வட, கீழ் மாநிலங்களில் தமிழும், மத்திய, தென் மாநிலங்களில் சிங்களமும், மேல் மாநிலத்தில் ஆங்கிலமும் அரசாங்க மொழியாகவும், இரண்டாவது மொழி ஒன்றுக்கு நியாயமான பாவிப்புரித்தும் அளிக்க அரசியற் சட்டத்தை மாற்றியமைத்தல்.
- மாநில அரசாங்கங்கள் வேண்டிய நேரம் மத்திய அரசாங்கத்தில் இருந்து பிரிந்து கொள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடமளித்தல்.
- தனியார் உடைமை, தனியார் துறைகளில் அரசு அதிகம் தலையிடாது இருத்தல் வேண்டும்.
- தேசவழமைக் கட்டுப்பாடுகளில் இருந்து தேசவழமைச் சட்டத்தின் கீழ்வாழும் பெண்களை விடுதலை செய்து பெண்களுக்குச் சம உரிமை அளித்தல்.
- கட்சி மாறுதல், கூட்டணி, கூட்டரசாங்கம் உண்டாக்குதல் இவற்றைச் சட்டப்படி தடைசெய்தல். [க]

# ''எமது கடமையிலிருந்து நாம் தவறலாமா?''

## 'வி. என்' கேட்கின்ருர்

மட்டுவில், திங்கள்

''சுமார் நான்கு நூற்ருண்டுகளாக அடிமைப்பட்டுக்கிடந்த தமிழினம், மீண்டும் சுதந்திரம் பெற்று, தலைநிமிர்ந்து நிற்க விரும்புகிறது. எமது நாட்டை ஒரு சுதந்திர தமிழ் ஈழமாக மலரவைத்து எமது எதிர்கால சமுதாயத்தை ஒரு சுதந்திர தமிழ் இனமாக வாழ வழிசெய்யாவிட்டால், நாம் எமதுகடமைகளிலிருந்து தவறிவிட்டோமென்றநிலைக்குத் தள்ளப்படுவோம்'' என்று சாவகச்சேரி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. வ. ந. நவரத்தினம், எழுதுமட்டுவாளில் திரு. வா. சிவராஜா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினர். அவர்தொடர்ந்துகூறியதாவது

''அன்று அந்நியன் எம்மை அடிமையாக்கினன். அதற்குப்பின் சிங்கள ஏகாதிபத்தியம் படிப்படியாக தமக்குள் ஆக்கிக் கொண்டது. இந்த நிலையில் தமிழன் வாழ்க்கையிலும் நாளாந்தம் அரசியல் சூழ்நிலையிலும் படிப்படியாகப் பாதிப்பு ஏற்படத் தொடங்கியது. ஆகவேதான் ஈழம் வாழ் தமிழன் இன்று, நாம் வாழவேண்டுமென்றல் நம்மை நாம் ஆளவேண்டும் என்ற உண்மையை உணரமுடிந்தது''

''ஒரு நாடு சுதந்திரம் பெற விரும்பினல் அது ஒரு சர்வதேசப் பிரச்னையாகிறது. இந்த அடிப்படையிலேதான் தமிழினத்தின் முடிவை அதன் இலட்சியத்தை, இன்று பல நாடுகளும் எதிர்பார்க்கிறது. இந்த நிலையில் எதிர்வரும் தேர்தல், சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் பெறுகிறது. மூன்று ஆண்டுகளில் தமிழ் ஈழம்பெற்றுத் தருவதாகவும் சிலர் பிரசாரங்களிலும் விஞ்ஞாபனங்களிலும் கூறுகிருர்கள். அப்படி அமைப்பதென்றல் இது மந்திரத்தால் மாங்காய் விழுத்தும் கதையாக அமைந்துவிடும். நாம் எமது சுதந்திர தமிழ் ஈழத்தை அமைக்க பெரும் தியாகங்களைச் செய்ய வேண்டும். இந்த அடிப்படையிலே தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு சுதந்திர தமிழ்ஈழம் அமைக்கும் முயற்சிக்கு பாராளுமன்றம் சாதாரண ஒரு ஆயுதம்தான். இதன் மூலம் எமது கோரிக்கையை அகில உலகிற்கும் காட்டமுடியும்.''

# ''தனிநாடுகோரிக்கையை மறுத்த தொண்டமானை கூட்டணித் தலைவராக வைத்திருக்கிருர்கள்''

அரியாலை, திங்கள்

அடையாள அட்டை மசோதாவை எதிர்த்து வாக்களித்த திரு. நவரத்தினத்தை தமிழரசுக்கட்சியிலிருந்து வெளியேற்றிய கூட்டணியினர், இப்போது தனித்தமிழ்நாட்டுப் பிரேரணையை ஏற்கமறுத்த திரு. தொண்டமானை கூட்டணியின் தலைவராகவும், தேர்தல் நியமனக்குழு அங்கத்தவராகவும் ஏன் வைத்திருக்கிருர்கள்? முப்பது வருடங்களாக மலைநாட்டுமக்களின் பிரஜாவுரிமை பறிபோனது பிழையென்று கூறிவரும் தமிழ் தலைவர்கள் டட்லி சேனநாயக்கா அரசாங்கத்தில் அங்கம்வகித்து ஆதரவு அளித்து வந்தபோது ஐந்தேமுக்கால் லட்சம் மலைநாட்டுத் தமிழ்மக்களை நாடுகடத்தும் சட்டமாகிய சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை ஆதரித்து ஒத்தாசை செய்ததேன்?' என்று அரியாலை கலைமகள் வட்டாரத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய நல்லூர்த் தொகுதி சுயேச்சை வேட்பாளர் திரு. இராஜராஜேஸ்வரன் தங்கராசா கேட்டார்.

திரு. எம். இந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில், தனித்தமிழ்நாட்டுத்தீர்மானத்துக்கு நீங்கள் அளிக்கும்வாக்குகள், இன்னும் பல்லாண்டுகள் தமிழ்மக்களை அடிமைகளாகவே வாழ வழி செய்யும்' என்று கூறினர்.

## 'வட்டு. மக்கள் ஆதரிப்பார்கள்'

சுழிபுரம், திங்கள்

'தமிழ் ஈழ விடுதலையைக் காண நாம் எடுத்த தீர்மானத்திற்கு வட்டுக்கோட்டைத் தொகுதி மக்கள் நல்ல பதிலளிப்பார்கள். கடந்தகாலத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதி மக்கள் எமக்குத்தந்த ஆதரவையும், தமிழ்பற்றும் இலட்சிய எழுச்சியும் மற்றயவர்களிலும்பார்க்க முதன்மை பெற்றிருந்ததை நாம் அறிவோம்'

சுழிபுரம் மடத்தடியில் நடைபெற்ற கூட்டணி காரியாலயத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கூட்டத்திற்கு திரு. சி. கண்ணுத்துரை தலைமைவகித்தார். (க)

## சாரணியத்தலைவி பேடன்பவல் காலமானர்

லண்டன், ஜூன் 27

உலக பெண் சாரணியத் தலைவி திருமதிபேடன் பவல் அம்மையார் லண்டனில் நேற்றுக்காலமானர்.

இறக்கும் போது இவருக்கு வயது88.

1930 ஆண்டு முதல் இறக்கும் வரை இவர் உலக பெண் சாரணியத் தலைவியாக இருந்துவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

**மணிவாக்கு**

கடவுளை எப்பெயர் கொண்டழைத்தாலும், அவரிடம் கடவுளின் குணங்கள் இருக்கும் போது யாம் அவரை வணங்க வேண்டும். — காந்திமகான்.

ஈழநாடு
THE EELANAADU

## உற்சவங்கள்

நாளை நயினைஅம்பாள் ரதோற்சவம். இது திருவிழாக்காலம். பல கோயில்களிலும் திருவிழாக்கள் நடைபெற்றுவருகின்றன. சைவக் கோயில்களில் மட்டுமல்ல மற்றும் தேவாலயங்கள், மசூதிகளிலும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

சில தினங்களுக்கு முன்னர்தான் புனித அந்தோனியார் திருநாள் கொண்டாடப்பட்டது. மண்கும்பான் பள்ளிவாசலில் இப்போது ஞாபகார்த்த விழா நடைபெற்றுவருகிறது.

தெய்வ நம்பிக்கையுடன் தான் மனிதன் வாழ்கிறான். அல்லல் தொல்லை வந்தவுடன் ஆண்டவனே என்று தன்னை இறைவனிடம் ஒப்படைக்கின்றான்.

ஆலய உற்சவங்கள் வெறும் கேளிக்கைவிழாக்களாகக் கருதப்படக்கூடாது. சில கோயில்களில் நடைபெறும் உற்சவங்கள் ஆடம்பரக் களியாட்ட விழாக்கள் என்று பிறர் கருதுமளவிற்கு நிகழ்ந்திருக்கின்றன.

பழமைக்கும் புதுமைக்கும் இ மனித்து பக்தியை மனதில் பதியச் செய்வதாக அமையவேண்டும்.

கோயில் உற்சவங்கள் சமூக சமய ஒற்றுமைக்கும் அடிப்படையானவை.

தனிப்பட்ட கோபதாபம் உள்ளவர்கள்கூட ஆலயத் திருவிழாவுக்குச் செல்லும் பொழுது தமக்கிடையே யுள்ள பகைமையை மறந்து ஒற்றுமைப் படுகின்றார்கள்.

ஒரு சமயத்தவரின் திருவிழா நடைபெறுகையில் பிறசமயத்தவரும் அதற்கு ஒத்துழைக்கிறார்கள். இதனால் சமய சமூக நல்லுறவு வலுப்பெறுகிறது.

சமயங்கள் வேறாக இருப்பினும் அவையாவும் ஒரே இடத்தையே நோக்கிச் செல்கின்றன.

நாட்டில் அமைதியும் சமூக சமய ஒற்றுமையும் நிலவுவதற்கு ஆலய உற்சவங்கள் பயன்படவேண்டும்.

பல்வேறு பிரச்னைகளில் சிக்கித்திணறும் மனிதகுலத்துக்கு மன அமைதியை இன்று கொடுக்கக் கூடிய ஒரேயொரு மார்க்கம் தெய்வவழிபாடு தான்.

இதற்கேற்ற வகையில் ஆலயஉற்சவாதிகள் அமையவேண்டும்.

மக்கள் மனதில் பக்தியை வளர்க்கும் நிகழ்ச்சிகளும் பசித்தோருக்குப் புசிக்க அன்னதானமும் உற்சவங்களில் முக்கிய இடம்பெறுவது அவசியமாகும்.

## ''35லட்சம் தமிழர்உரிமையை பாதுகாக்கவே கூட்டணி''

-- ராஜலிங்கம்

உடுப்பிட்டி, திங்கள்

''கடந்த பொதுத்தேர்தலில் பலவாறாகப் பிரிந்து நின்ற தமிழினம் இன்று ஒருமித்து நிற்கின்றது. தமிழர்விடுதலைக் கூட்டணியின் ஒருமைப்பாடே இதற்குக் காரணம்''.

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதியில் தமிழர்விடுதலைக் கூட்டணி வேட்பாளராகப் போட்டியிடும் திரு.த. இராஜலிங்கம் கரணவாய் தெற்கு, தூதாவளை என்னுமிடத்தில் நடைபெற்ற தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. த. இராஜலிங்கம் தொடர்ந்து பேசும்பொழுது கூறியதாவது:

''தமிழ்மக்களிடையே ஏற்பட்டுள்ள ஒருமைப்பாட்டின் பயனாகவே உடுப்பிட்டித் தொகுதிமக்கள் என்னையும்தங்கள் வேட்பாளனாக ஏற்றுக் கொண்டுள்ளனர். இலங்கையில் வாழும் 35லட்சம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளைப் பாதுகாக்கவே தமிழர் விடுதலைக்கூட்டணி ஒன்றுபட்டு நிற்கின்றது. இதனால் சாதிப்பாகுபாடு ஒழிக்கப்பட்டுத் தீண்டாமையைப் போக்கும் நிலை உருவாகியது. இந்த வகையில் உடுப்பிட்டி ஒருசாதனையை நிலைநாட்டவுள்ளது. தமிழினம் இன்று சுதந்திரதாகம் கொண்டுதவிக்கின்றது. இவ்வேளையில் எனது பதவியைத் துறந்து இன விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு சுதந்திரப்பாதையை அமைக்க முற்பட்டேன்.''

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசும்போது ''உலகநாடுகள் எமது விடுதலை இயக்கத்தைப்பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம்காட்டி வருகின்றன மனிதனுக்கு மனிதன் அடிமையாக வாழமுடியாது. நாம் ஒரே இனமாக இலட்சியவாழ்வு வாழவேண்டும்'' என்று சொன்னார்.

திரு. எம். சிவசிதம்பரம், திரு. சி. கதிரவேற்பிள்ளை ஆகியோரும் பேசினர். உடுப்பிட்டி முன்னாள் எம். பி. திரு. கே. ஜெயக்கொடி தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. (அ)

## ''எமக்கு4 தொகுதிகளாவது ஒதுக்கியிருக்க வேண்டும்''

### வட்டு. சுயேச்சையாளர் வருத்தம்

சங்கானை, திங்கள்

''தமிழர் விடுதலைக் கூட்டணியின் தனிநாடு பிரிவினைக் கோரிக்கை அமுல் நடத்தப் படுமேயானால் மனித உரிமை மறுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் நிலை, இன்றைய நிலையைவிட மோசமாகிவிடுமோ என நாம் அஞ்சுகின்றோம்''

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடும் திரு. வை. இரட்டாய் வட்டு. கிழக்கில் பிள்ளையார் ஆலயத்தின் அருகாமையில் நடைபெற்ற தேர்தல் கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. எஸ். தம்பிமுத்து தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது. திரு இரட்டாய் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''கூட்டணியினரின் வட்டுக்கோட்டை மகாநாட்டுத் தீர்மானத்திற்கு வாக்களியுங்கள் என்ற கோஷம் எழுப்பப்படும் இவ்வேளையில் 'சாதி வெறியின்' சரித்திரம் இன்று முற்றுப்பெற்றுவிட்டதா? சமதர்மமாற்றம் நிலைபெற்றுவிட்டதா? என்று கேட்க நான் விரும்புகின்றேன். இது போன்ற சொல்லொணாத் துயரிலிருந்து விடுபடுவதற்கும் பிரிவினைக்கொள்கையை மூடியுமானால்தேசியப் பேரவையில் எதிர்க்கவும் மற்றும் இதனோடு இணைந்த எமது இனத்தின் பல்வேறு குறைகளை நிவர்த்தி செய்வதற்காகவும் நான் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளேன். தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் ஆறு லட்சம் ஒதுக்கப்பட்ட மக்கள் இந்த நாட்டில் வாழ்கின்றனர். இவர்களின் சனத்தொகையை ஏனைய மக்களுடன் ஒப்பிடுகையில், ஆகக் குறைந்தது நான்கு தொகுதியாவது எமக்கு வழங்கப்பட்டு தேசியப்பேரவை செல்ல வழி வகுத்திருக்கவேண்டும். இதனைவிட்டுஒரு இராசலிங்கத்தைமட்டும்கூட்டணியினர்நியமித்து எமையெல்லாம் ஏமாற்றப் பார்க்கிறார்கள்''.

## தாகசாந்தி நிலையம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நயினை ஸ்ரீ-நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான முன்றலில் நயினாதீவு அபிவிருத்திச் சபையின் தாகசாந்தி நிலையத்தை யாழ்.ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோயில் தருமகர்த்தா திரு.சி.தியாகராசா ஆரம்பித்துவைப்பார். சிவஸ்ரீ ஐ.கைலாசநாதக்குருக்கள், திரு ம.ஸ்ரீகாந்தா, திரு. செ.சிவஞானம், திரு.மு. சுப்பிரமணியம் உள்ளிட்டு பலர் ஆசியுரை வழங்குவார்கள்.

## 'தமிழர் பிரச்னையைச் சலசலப்பின்றித் தீர்க்கலாம்'

யாழ்ப்பாணம், செவ்

''அரசியல்தலைவர்கள் தமது பிரச்னைகளைக் காலத்துக்குக் காலம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுத் தீர்த்துவைப்பதற்கு இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவது இயற்கை. இது உலக நாடுகளில் கைக்கொள்ளும் முறையும்கூட. தமிழர்களது பிரச்னை இன்று தனிநாடு என்றாலும், இதைச் சிங்களத்தலைவர்கள் அரசியல் கொந்தளிப்பில்லாமல் தீர்த்து வைப்பதற்கு இப்படியான முறைகளைக் கைக்கொள்ளலாம்'' திரு. ஐ வைத்திலிங்கம் அனலைதீவில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி பிரசாரக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

திரு. சந்ததியார் பேசும்போது ''தமிழனுக்கு எந்த நாட்டிலும் தனிநாடு கிடையாது அவன் வரலாற்றுப்புகழ் கொண்ட இனமாக இருந்தும் அவனது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு பிறநாட்டவரால், விரும்பிப்போற்றப்படும் போது, அவன் தன்இனத்தைப் பேணஅவனுக்கு ஒருநாடுவேண்டும். உலகில் தமிழன் வாழுகின்ற நாட்டில் இலங்கையில் மட்டும் ஒற்றையாட்சி முறையை எதிர்த்து தனிநாடு கோருகிறான். இத்தேர்தலை அவனும் அவதானிக்கின்றான். இதை தமிழினம்கடைசித்தேர்தலாக உணர்ந்து, உலகஅரங்குக்கு உணர்த்த தமது பங்கை செவ்வனே செய்யவேண்டும்'' என்றார்

ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில் ''தமிழன் இன்றிருக்கும் நிலையில், 65ல் என்ன நடந்தது, 70ல் என்ன நடந்தது பற்றி சிந்திக்கவில்லை. தமிழினத்திற்கு விடிவு தரக்கூடிய ஒரேயொரு இயக்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியென்ற சிந்தனையில் போராட்டக்களத்தில் தயாராகிக்கொண்டு தேர்தலை நோக்கி நிற்கின்றார்கள் தமிழ் மக்கள். அவர்கள் இத்தேர்தலில், ஒற்றுமையைக்குலைக்கும் சக்திகள் தோன்றமாட்டார்கள் என்றே கடைசிவரை எண்ணினார்கள் இன்று அச்சக்திகளுக்கிடையில் நடைபெறும் போராட்டத்தைவென்று உண்மையான ஒரு தனிநாட்டைப் பெறுவார்கள்'' என்றார்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் எஸ். கே. மகேந்திரன், அண்ணாதாஸன், தியாகராசா உட்பட பலர் உரையாற்றினர். (கெ-ஈ)

## ஐயாறன் எழுதுவது

''ஈழநாடு'' காரியாலயத்தில் நேற்றுக் காலை இலக்கணச் சுவாமியார் எனும் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமி தம்பிரான் அவர்களின் திருவுருவப்படத்தை ஸ்தாபித்து, ஊழியர்களும், நிர்வாகிகளும், குடும்பத்தவர்களும் சேர்ந்து வழிபாடு செய்தனர்.

இந்தப் பத்திரிகை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு, சென்ற 19ஆண்டுகளாக நடைபெற முடிகிறதென்றால் இதை ஏதோ ஒரு சக்தி இயக்கிவருகின்றதென்பது தெட்டத் தெளிவு.

இந்தச் சக்தியின் ரகசியம் என்ன? இதுவரை காலமாக ஒரு தினசரிப் பத்திரிகை இங்கு நடைபெறுதிருந்த நிலையில், நாம் செய்த தவப்பயனால் ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிதம்பிரான் அவர்கள் இங்கு அவதரித்து, தமிழ்நாடு சென்று தவ வாழ்க்கை நடத்தி அங்கு சைவத்துக்கும், தமிழுக்கும் நற்றொண்டாற்றிப் பெரும் புகழ்பெற்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் ஒரு தினசரித் தமிழ்ப் பத்திரிகையை நடத்தவேண்டுமென்று திருவுளம் கொண்டு, அவருடைய பூர்வாசிரம மருகரான திரு. கே. ஸி. தங்கராஜா அவர்களை ஊக்குவித்தார்கள்.

ஒரு தினசரிப் பத்திரிகையை, அதுவும் நவீன வசதிகளற்ற யாழ்ப்பாணத்தில் நடத்துவது என்பது இலேசல்ல எவ்வளவு சோதனைகள்; எவ்வளவு வசதியீனங்கள். இவற்றை எல்லாம் சமாளித்து, பத்திரிகை தொடர்ந்து நடந்துவருவது ஓர் அதிசயமேயாகும். ஸ்ரீமத் இலக்கணச் சுவாமியின் தவ வாழ்க்கையின் சக்தியே இதற்குக் காரணமென்று கூறின் அது மிகையாகாது.

அந்த மகான் தோன்றாத் துணையாக இருந்து இப்பத்திரிகை ஸ்தாபனத்தை இன்னும் இயக்கிவருகின்றார்கள். அவரை மறந்துவிடாமல் இருக்கவே, அவரது திருவுருவப் படம் ஈழநாடு காரியாலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. என்ன கஷ்டங்களோ சோதனைகளோ வந்தாலும், அவற்றை எல்லாம் சமாளித்து எங்களுக்கு வழிகாட்டி நல்வழிப்படுத்துவார் என்ற நம்பிக்கையை அவரது திருவுருவம் எங்களுக்கு நம்பிக்கை அளிக்கின்றது; புதுப் பலத்தையும் அளித்துவருகின்றது.

(4ம் கலம் பார்க்க)

(5ம் கலத் தொடர்ச்சி)

வருவம் எங்களுக்கு நம்பிக்கை அளிக்கின்றது; புதுப் பலத்தையும் அளித்துவருகின்றது.

மகாத்மா காந்தி தமது தபோபலத்தால் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே எதிர்த்து பாரத நாட்டுக்குக் கிடைத்தற்கரிய விடுதலையை வாங்கித்தந்தார். அதேபோல், ஸ்ரீமத் இலக்கண சுவாமிகளின் அரிய தபோ சக்தியால் ஈழநாடு ஸ்தாபனம் 19 ஆண்டுகளுக்கு மேல் நடைபெற்று, மக்களுக்குக் கூடிய தொண்டாற்றி வரமுடிகின்றது.

முற்காலத்திலே மக்கள் வேதங்களையும் சாஸ்திரங்களையும் தினசரி படித்து வாழ்க்கைக்கு வழிகாட்டப் பயன்படுத்தியதாகவும், இக்காலத்தில், அவற்றை யாரும் படிப்பதில்லை என்றும், தினசரிப் பத்திரிகைகளே அந்த அரும் தொண்டை செய்வதாகவும், ஆகவே தினசரிப்பத்திரிகைகளின் பொறுப்பும் கடமையும் மிக அதிகமென்றும் மகாத்மா காந்தி கூறுவார்கள்.

இந்தப் புனிதத் தொண்டைச் செய்ய ஊக்கமும் உற்சாகமும் அளித்து, கூடுமான வரை தவறுகளிலிருந்துகாத்து வரும் மகாசக்தியாக விளங்குபவர், தவமுனிவரான ஸ்ரீதம்பிரான் சுவாமிகள் அவர்களே

இப்போது ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அப்பெரியாரின் திருவுருவப்படம், ஒவ்வொரு நாளும் அவரது அருளாசியை எங்களுக்கு நினைவூட்டி எங்களை இப்புனிதத் தொண்டில் வெற்றிகரமாக நடத்திச் செல்லுமென்று நம்பிக்கையுடன் பிரார்த்திக்கின்றோம்



வேலர்: பன்னிரண்டு மயிலுக்கு அப்பால் இருக்கிற சன்னதிக்கு கால்நடையாய் போய் வாற பொன்னர் இப்ப பக்கத்து வயிரவ கோவிலுக்குப் போறதுக்கும் கார் தான்.
மயிலர்: சுவீப்பில் கார் விழுந்ததோ?
வேலர்: இல்லை தேர்தல் பிரச்சாரம் செய்வதற்கு வேட்பாளர் கொடுத்த கார்.
மணியம்: தேர்தல் காலம் பல்லக்கு தேர்தல்முடியக் கால்நடை.

யாழ்ப்பாணத்தில்

## புற்றுநோய் சிகிச்சை நிலையம்: யாழ். றோட்டரி சங்கமும் உதவி

நல்லூர், திங்கள்

யாழ்ப்பாணத்தில் ஒரு புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைக்கும் நோக்கத்துடன் யாழ்ப்பாணம் றோட்டரிச் சங்கம், யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிப் பழைய மாணவர் சங்க உறுப்பினரின் உதவியுடன் ஒரு பொருட்காட்சியையும், கார்ணிவலையும் அடுத்த மாதம் 30ம் திகதி முதல் ஆகஸ்ட் 10ம் திகதி வரையும் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்துவருகின்றனர்.

மற்றும் அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் தனியார் நிறுவனங்கள் இப்பொருட்காட்சியில் பங்கு கொள்ள இருக்கின்றன.

மேலும் இக்கார்ணிவலில் விவசாய கைத்தொழில் சம்பந்தமான காட்சிகளும் மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகளும் மயிர்க்கூச்செறியும் சர்க்கஸ் விளையாட்டுக்களும் கதம்ப நிகழ்ச்சிகள், கராட்டிமுதலான நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

புற்றுநோய் சங்கத்தினர் கொடூரமான இந்நோயை அறவே அகற்றுவதற்காக பெரும்பாடுபட்டு வருகின்றனர்கள். யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் பற்றிக்கொண்டோரை யாழ்ப்பாணத்திலேயே சரியான சிகிச்சை அளிக்கக்கூடிய சிகிச்சை நிலையம் இல்லாத காரணத்தால் பல மைல்களுக்கப்பால் மகரகம சிகிச்சை நிலையத்திற்கு அனுப்புகிறார்கள். அங்கு அவர்கள்படும் கஷ்டம் சொல்லுந்தரமன்று. ஆகவே எம்மவர்கள் கஷ்டமின்றிச் சிகிச்சை பெறுவதற்குப் புற்றுநோய் சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணத்தில் அமைப்பதற்கு மக்களின் பூரண ஆதரவை யாழ்ப்பாணம் றோட்டரிச் சங்கம் எதிர்பார்க்கின்றது. இத்துடன் ஏனைய பொது நலக் கழகங்கள் மேலும் முயற்சி எடுப்பார்கள் என்று நம்புகிறோம்' என்று றோட்டரிச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

யாழ். நகரில் றோட்டரிச் சங்கம் பல பொதுநலப் பணிகளை மேற்கொண்டுள்ளது தெரிந்ததே. தற்போதுயாழ்ப்பாணத்தில் புதிதாகக் கட்டப்பட்ட வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தின் முன்பாக யாழ். றோட்டரிச் சங்கம் நோயாளர்கள் தங்குவதற்கு ஒரு மண்டபம் கட்டி முடியும் தறுவாயில் இருக்கிறது. (அ)

## "தமிழ் ஈழம் தவிர மாற்றுத் திட்டம் எதுவுமேஇல்லை!"

### மூ. ஆலாலசுந்தரம்

யாழ்ப்பாணம், செவ்.

"தனிநாட்சித் தமிழ்ஈழம் தவிர, இம்மியளவும் குறைவான வேறு எந்தவொரு மாற்றுத் திட்டத்தையும் தமிழர் விடுதலைக்கூட்டணி ஏற்றுக்கொள்ளாது"

இவ்வாறு உரும்பராய் சிவகுமாரன் சிலைக்கு அருகில் முன்னாள் பட்டினசபை உறுப்பினர் திரு.சா.அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து தமது உரையில்; "தந்தை செல்வா தலைவர் வன்னியசிங்கம் போன்றவர்கள் 30 ஆண்டுகளுக்கு முன்பே, தமிழ்பேசும் மக்கள் தங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளத் தமிழர்களுக்கென்றொரு அரசியல் இயக்கத்தை உருவாக்கவேண்டும் என்று கூறியபோது, கைகொட்டிச் சிரித்தவர்கள், கண்டித்தவர்கள், வகுப்புவாதம் என்று கண்டனம் தெரிவித்தவர்கள் காலப்போக்கில், அதுதான் சரியான வழியென்று சிந்தனைத் தெளிவுபெற்றுவிட்டனர். இந்த நிலை தமிழர்களின் எதிர்காலம் இந்த நாட்டில் சுபீட்சம் நிறைந்ததாகவும், சுதந்திரம் உள்ளதாகவும், அமையும் என்பதனையே காட்டுகிறது தமிழ்ப்பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை தடுப்பதற்காக தந்தை குரல் எழுப்பிய போது, அதனைப் பச்சை வகுப்புவாதம் எனக் குற்றம் சாட்டிய இடதுசாரிகள் கூட இன்று சிந்தனைத் தெளிவு பெற்று, தமிழர்கள் தாயகம் அந்நிய இனத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து காப்பாற்றப் படவேண்டும் என்பதனை ஏற்

[7ம் பக்கம் பார்க்க]

## எம்.பி.யாவது எப்படி?

# குடியரசு சனாதிபதியினால் செய்யப்படும் பிரகடனம்

—செ.சிறீக்கந்தராசா—

(சட்டத்தரணி

### சட்டமும் சமுதாயமும்

**நியமனநாள் அல்லது தேர்தலுக்கென பெயர் குறித்து நியமிக்கும் நாள்**

இதை "நொமினேசன் டே" (Nomination Day) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். தேசிய அரசுப்பேரவையைக் கலைக்கின்ற சனாதிபதியின் பிரகடனம் (1) அரசுப் பேரவை எந்தத் தேதியில் இருந்து கலைக்கப்படுகின்றது; (2) எந்தத் தேதியில் வேட்பாளர்களைப் பெயர்குறித்து நியமித்தல்வேண்டும்; [3] பெயர் குறித்து நியமிப்பதற்கான இடங்கள் யாவை; [4] தேர்தல் நடைபெறுவதற்கான தேதி யாது; [5] தேர்தலின் பின்னர் தேசியஅரசுப் பேரவை கூடவேண்டிய தேதி எது ஆகிய விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்று இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் அரசுப் பேரவைக்கட்டளையின் 27ஆம் பிரிவும் அரசியலமைப்புச்சட்டத்தின் 41ஆம் பிரிவும் கூறுகின்றன. 18-5-1977 அன்று சனாதிபதி வெளியிட்ட பிரகடனத்தை ஒருதரம் பார்த்தால் அது விளங்குமாதலால் அந்தப் பிரகடனத்தை அப்படியே இங்கே தருகிறோம்:-

**இலங்கைக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்**

[இலச்சினை]

இலங்கைக் குடியரசின் சனாதிபதி வில்லியம் கோபல்லவ ஆகிய யான், இலங்கை அரசியலமைப்பின் 21ஆம், 41ஆம் பிரிவுகளினால் எனக் குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டும், 1946ஆம் ஆண்டின் இலங்கை [பாராளுமன்றத் தேர்தல்கள்] அரசுப்பேரவைக் கட்டளையின் 27ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றியும், இந்தப் பிரகடனத்தின் மூலமும் பின்வருமாறு செய்கிறேன் என்பதை அறிவீராக:-

[1] தேசிய அரசுப்பேரவையைக் கலைக்கிறேன்;

[2] ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டு யூன் மாதம் 6ஆம் நாளை, புதிய தேசிய அரசுப் பேரவையின் தேர்தலுக்கான வேட்பாளர்கள் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கான தேதியாகக் குறித்துரைக்கிறேன்;

[3] இதற்கான அட்டவணையில் 11-ஆம் நிரையில் குறிப்பிடப்பட்ட இடம் ஒவ்வொன்றையும், அதே அட்டவணையின் 1ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறிப்பிடப்பட்டதும், புதிய தேசியஅரசுப் பேரவைக்கானதுமான தேர்தல் மாவட்டத்திற்குத் தேர்தலில் நிற்கும் வேட்பாளர்களைப் பெயர் குறித்து நியமிப்பதற்கான இடமாகக் குறித்துரைக்கின்றேன்;

[4] ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டு யூலை மாதம் 21ஆம் நாளை தேசிய அரசப்பேரவைக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் தேதியாக நிர்ணயிக்கின்றேன்; அத்துடன்

[5] ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டு ஒகத்து மாதம் 26ஆம் நாளன்று புதியதேசிய அரசுப் பேரவையைக் கூடுமாறு அழைக்கிறேன்.

1977ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் நாளாகிய இன்று பிற்பகல் 1 மணியளவில் கொழும்பில், இலங்கைக் குடியரசின் பொது இலச்சினையின் கீழ் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

எச். சீ. டீ. விஜேசிங்க.

சனாதிபதியின் செயலாளர்.

**அட்டவணை**

| நிரை 4 | | நிரை 11 |
| --- | --- | --- |
| தேர்தல் மாவட்டம் | | பெயர் குறித்து நியமிப்பதற்கான இடம். |
| இலக்கம் | 1- கொழும்பு வடக்கு | ) |
| " | 2- கொழும்பு மத்தி | ) |
| " | 3- பொறளை | ) |
| " | 4- கொழும்பு கிழக்கு | ) பதிவாளர் தலைமை |
| | | ) அதிபதியின் |
| " | 5- கொழும்பு மேற்கு | ) அலுவலகம், |
| " | 6- தெகிவளை | ) கொழும்பு-1 |
| " | 7- இரத்துமலானை | ) |

மேலேகாட்டியவாறு 160 தொகுதிகளினதும் இலக்கமும், பெயரும், பெயர் குறித்து நியமிப்பதற்கான இடமும் பிரகடனத்தின் அட்டவணையில் இடம்பெறும். 160 தொகுதிகளையும் இங்கே குறிப்பது அவசியமில்லை என்பதால் உதாரணத்துக்குஏழினைமட்டும் தந்துள்ளோம்.

**நியமனத் தேதியன்று செய்யவேண்டியன யாவை (பிரிவு 30)**

"நியமனத் தேதியன்று காலை பத்து மணிக்கும் பதினொரு மணிக்கும் இடையில் நியமனப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கென தேர்தற் பொறுப்பு உத்தியோகத்தர் நியமன இடத்தில் (Place of-Nominatun)பிரசன்னமாயிருத்தல்வேண்டும்" என்று இ பா. தே. அ. பே. கட்டளையின் 30ம் பிரிவின் [1] ஆம் உட்பிரிவு கூறுகின்றது. "காலை பத்து மணிக்கும் பதினொருமணிக்கும் இடையில்" என்ற சொற்களை வாசகர்கள் மனங்கொள்ளல் வேண்டும். இது மிகவும் முக்கியம்.

30 (1)ஆம் பிரிவை, 28[5] ஆம் பிரிவுடன் ஒப்பிட்டு நோக்குதல் பயன் தரும். இரண்டுக்குமிடையே ஒரு முரண்பாடு இருப்பதாகத் தோன்றுகின்றது; '27ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பிரகடனம் அல்லது அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதிக்கும் நியமனத் தேதியன்று பிற்பகல் 1 மணிக்கும் இடையில் எந்த நேரத்திலும்தேர்தற்பொறுப்பு உத்தியோகத்தர் நியமனப்பத்திரப்படிவம் ஒன்றை, "பதிவு பெற்ற தேருநர் எவருக்கும் வழங்கலாம்"என்று 28[5]ஆம் பிரிவு கூறுகின்றது அதாவது நியமனத் தேதியன்று பிற்பகல் 1மணிவரை நியமனப் பத்திரப்படிவத்தை ஒரு தேருநர் பெற்றுக்கொள்ளலாம் என்று 28[5]ஆம் பிரிவு கூறுகின்றது. ஆனால், 30[1]ஆம் பிரிவுஎன்ன கூறுகின்றதுஎன்று பாருங்கள்? இது அபத்தமாக எதையோ கூறுகின்றது. அந்தப்பிரிவு வருமாறு: 'நியமனத் தேதியன்று காலை பத்து மணிக்கும் காலை பதினொரு மணிக்கும் இடையில், நியமனப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கென தேர்தற்பொறுப்புத்தியோகத்தர் நியமன இடத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும். [தொடரும்]

## "ஏற்றத் தாழ்வுகளுக்கு சாவுமணி அடிப்போம்!"

மட்டுவில், திங்கள்

"சுதந்திர தமிழ்ஈழத்தின் மலர்ச்சியைக் காணத் துடிக்கும் எமது தமிழினம் நமக்குக் கிடைக்கப்போகும் சுதந்திரத்தை, ஒற்றுமையாய், ஒன்றுபட்டு அனுபவிக்கப்பழகவேண்டும். அதற்கு நமது மத்தியிலே சாதியின் பேரால்—மதத்தின் பேரால் ஆதியில் இல்லாது பாதியில் புகுந்து கொண்ட ஏற்றத் தாழ்வை ஒழிக்கவேண்டும். அதையே தமிழர் கூட்டணி கூறியும் வருகிறது, அதற்காகவே உழைத்தும் வருகிறது."

இவ்வாறு திரு. வண்ணை ஆனந்தன், வரணியில் பேசும் போது கூறினார், வரணி கரம்பைக்குறிச்சியில், இளைப்பாறிய ஆசிரியர் பண்டிதர். திரு.சின்னையா தலைமையில், சாவகச்சேரித்தொகுதி தமிழர் கூட்டணிவேட்பாளர் திரு. வ. ந, நவரத்தினத்தை ஆதரித்துப் நடைபெற்றது திரு. வண்ணை ஆனந்தன் தொடர்ந்து கூறியதாவது:-

"அன்று அந்நியன் இந்த நாட்டை ஆளும்போது இந்தப் பிரித்தாளும் யுக்தியைக்கையாண்டான். இதைநமது ஆளும் இனமும் கையாளப் பார்க்கிறது. இதற்கு ஒருபோதும் இடம் கொடுக்கக் கூடாது. தமிழன் 33நாடுகளில் பரந்து வாழுகிறான் தமிழன் இல்லாத நாடில்லை என்பார்கள். ஆனால் அவனுக்கென்று ஒரு நாடு இல்லை! தமிழன் பெரும்பாலும் கௌரவ அடிமையாகவே வாழ்கிறான். நமது தமிழ் தலைவர்கள் ஒன்று கூடி, ஒரு சுதந்திர தமிழ் ஈழத்தை அமைக்க முன்வந்துள்ளனர். அந்தச் சுதந்திர தமிழ் ஈழத்திலே ஏற்றத் தாழ்வுகளுக்கு இடமில்லாதவாறு சாவுமணி அடிக்கப்படும். இதனை நிறைவேற்ற எதிர்வரும் தேர்தலை பயன் படுத்துவோம்."

சாவகச்சேரித் தமிழர் கூட்டணி வேட்பாளர் திரு.வ.ந. நவரத்தினம் பேசுகையில், "நாம் வாழ வேண்டும் என்றால் நம்மைநாம் ஆளவேண்டும் ஆளும்பொறுப்பு நம்மிடம் வந்தால்தான், நமது நாட்டின் அபிவிருத்தியையும் சுதந்திரமாக ஆக்கிக் கொள்ள முடியும். இன்று நமது நாட்டிலே உரிமைகள் மறுக்கப்படுகின்றன தமிழன் கற்றூண்களாகக் கூட நிற்க உரிமை இல்லாதவனாக இருக்கிறான். இந்த உரிமையை வென்றெடுக்கவே தமிழினம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்."

'பிரிவினையை ஆதரித்தால்

## சிறுபான்மைத் தமிழரின் முன்னேற்றம் தடைப்படும்'

உடுப்பிட்டி, திங்கள்

"சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதி ஒருவர் தேசிய அரசுப் பேரவைக்குச் சென்று பிரிவினைக் கோரிக்கைக்குக் கைதூக்குவாரேயானால் இவ்வளவு காலமும் அனுதாபத்தினால் எமக்கு உதவி வந்த அரசுகள் தமது உதவிகளை நிறுத்திக் கொள்ளும் எனவே, சிறுபான்மைத் தமிழரின் வளர்ச்சி தடைப்படும்".

தமிழ் நாட்டு எதிர்ப்பு முன்னணி வெளியிட்டுள்ள பகிரங்க அறிக்கை யொன்றில் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளது. இப்பகிரங்க அறிக்கையைத் தமிழ்நாட்டு எதிர்ப்பு முன்னணி சார்பில் துன்னாலையைச் சேர்ந்த திரு. என்.லங்காமணி என்பவர் வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

இப்பிரிவினைக்கோரிக்கையை வலுவாக எதிர்க்கும் நோக்குடன் கோப்பாயில் திரு. நடராசாவையும் சாவகச்சேரியில் திரு.கே.ஏ.ஜெரோமை வட்டுக்கோட்டையில் திரு. ரட்டாவையும், உடுப்பிட்டியில் திரு.எஸ்.எஸ். சுந்தரத்தையும் எங்கள் அணி ஆதரிக்கின்றது. நாம் மானிப்பாய்க்கு நியமித்த வேட்பாளர் கூட்டணியினர் ஆட்சேபித்து அவரைப் போட்டியிலிருந்து ஒதுக்கி விட்டனர். (க)

யாழ். புற்றுநோய் சிகிச்சை நிலைய ஸ்தாபித நிதிக்காக

## ஈழநாடு

தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

### போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளி லும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப் பிடுக:-

| தொ.இல. | தொகுதி | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | .................... |
| 80. | வட்டுக்கோட்டை | .................... |
| 81. | காங்கேசன் துறை | .................... |
| 82. | மானிப்பாய் | .................... |
| 83. | கோப்பாய் | .................... |
| 84. | உடுப்பிட்டி | .................... |
| 85. | பருத்தித்துறை | .................... |
| 86. | சாவகச்சேரி | .................... |
| 87. | நல்லூர் | .................... |
| 88 | யாழ்ப்பாணம் | .................... |
| 89. | கிளிநொச்சி | .................... |
| 90. | மன்னார் | .................... |
| 91. | முல்லைத்தீவு | .................... |
| 92. | வவுனியா | .................... |
| 94. | திருகோணமலை | .................... |
| 95. | மூதூர் | .................... |
| 96. | கல்குடா | .................... |
| 97. | மட்டக்களப்பு (1) | .................... |
| | (2) | .................... |
| 98. | பட்டிருப்பு | .................... |
| 100. | சம்மாந்துறை | .................... |
| 101. | கல்முனை | .................... |
| 102. | பொத்துவில் (1) | .................... |
| | (2) | .................... |
| 103. | புத்தளம் | .................... |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| .......... | .......... | .................... |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| .......... | .......... | .................... |

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| .......... | .......... | .................... |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப் பிடுக.

| தொ.இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 84. | உடுப்பிட்டி | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 85. | பருத்தித்துறை | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |
| 97. | மட்டக்களப்பு | 1. | .................... |
| | | 2. | .................... |
| | | 3. | .................... |

தபாற்கட்டளை/ காசுக்கட்டளை இல .......... ரூபா .......... இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், புதன் கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியி டப்படும் "ஈழநாடு தேர்தல்-77போட்டி." நிபந்தனைக ளுக்கும் அதன் நடுவர் குழு"வின் தீர்மானத்துக்கும்கட்டுப் படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ... ...

திகதி ..........

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காள ருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத் தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக் கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையே இப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன் ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பு; (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படிவாக் குகள்= அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றாவ தாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்து வரும் தொகைகளாகும்.

# "கூட்டணிக்கு அளிக்கும்வாக்கு சுதந்திரத்துக்கு அளிக்கும் வாக்கு"

—கதிரவேலுப்பிள்ளை

யாழ்ப்பாணம், செவ்வாய் "எங்களுக்கு வேண்டிய அனைத்தையும் நாங்களே செய் கின்ற சுதந்திரம்தான் எமக்கு வேண்டும். எனவே எமது வாக்காளர்கள் அந்தச் சுதந் திரத்திற்காக வாக்களிக்க வேண்டும்."

இவ்வாறு உரும்பராய்ச் சந் தியில் சிவகுமாரன் சிலைக்கரு கில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கோப்பாய்த் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பேசு கையில் கூறினார்.

இக்கூட்டத்திற்கு திரு. என். அரியநாயகம் தலைமைவகித் தார்.

திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை தொடர்ந்து பேசுகையில், "வருகின்ற பொதுத் தேர்தல் மூன்று அடிப்படைக் காரணி களைக் கொண்டது. ஒன்று புதிய கொள்கை அதாவது சுதந்திரம். இச்சுதந்திரத்தி ன் அர்த்தம் மனிதனுக்கு மனி தன் அடிமையற்ற நிலையாகும். இரண்டாவது புதிய ஒற் றுமை. இவ்வொற்றுமையின் காரணமாகவே தமிழர் விடு தலைக் கூட்டணி விளங்குகின் றது. மூன்றாவது சின்னம். இச்சின்னமாகிய உதயசூரியன் இருளில் மூழ்கியிருந்த அடி மையான தமிழ்மக்களை விழிப் படையச் செய்கின்றது" எனக் கூறினார்.

உடுப்பிட்டித் தொகுதிக் கூட்டணி வேட்பாளர் திரு. கே. இராஜலிங்கம் பேசுகை யில் "தமிழ் ஈழக் கொள்கை யைப் பொதுமக்களின் அங்கி காரம் பெறவே வருகின்ற பொதுத் தேர்தலை ஒரு சந் தர்ப்பமாகப் பயன்படுத்து கின்றோம். 35 லட்சம் தமிழ் மக்களில் எத்தனைபேர் கூட் டணியின் கொள்கையை ஏற் கிறார்கள் என்பதை உலக அரசியல் அவதானிகள் உற்று நோக்குகிறார்கள்.

"இந்நாட்டில் 1976ம் ஆண்டு வரை ஆட்சி நடத் திய அரசாங்கங்கள் ஐந்தரை லட்சம் சிறுபான்மைத் தமி ழர்களில் ஒருவருக்குக்கூடத் தொகுதிப் பிரதிநிதித்துவம் வழங்கவில்லை. இதனால் நமது இனம் சிதறுண்டு பல பாகங் களிலும் பிரிந்துவாழுகின்றது. இந்த இனத்தின் ஒருமைப் பாட்டுக்காக வருகின்ற சந் தர்ப்பத்தை நாம் தட்டிக் கழிக்கக்கூடாது என்பதற்கா கவே நான் தேர்தலில் நிற்க ஒப்புக்கொண்டேன்" என் றார்.

மலையகத்தைச் சேர்ந்த திரு. எஸ் மயில்வாகனம் பேசுகை யில், "அகிம்சாமூர்த்தி அண் ணல் காந்தியின் மறு வாரிசு தந்தை செல்வா ஆட்சிமன் றத்தில் தமிழ் ஈழக் கோரிக் கையை எழுப்பிய பின் முதன் முறையாக வருகின்ற தேர்தல் இதுவாகும்" என்றார்.

திரு. தர்மலிங்கம், பேசுகை யில் "இலங்கையின் சரித் திரத்திலேயே தமிழினம் ஆளப்படும் இனமாகக் கூறப் படவில்லை. ஆனால் தற்போது ஆளப்படும் இனமாக்கப்பட்டு நமது உரிமைகள் அனைத்தை யும் இழந்துள்ளோம். குறைந்த பட்ச உரிமைகளைக்கூட வழங்க முன்வந்தபோது அதைச் சிங் கள மக்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. இதனாலேயே நாம் பிரிந்து வாழவேண்டிய நிர்ப் பந்தம்ஏற்பட்டுள்ளது" என்று கூறினார்.

திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில் "அமரர் வன்னிய சிங்கமும் செல்வநாயகமும் கடந்த காலங்களிலே தன் கையை நம்பியே வாழவேண்டு மென்று எமக்கு எடுத்துரைத் தனர். அதைத் தற்போது தமிழ்மக்கள் உணர்ந்திருக்கின் றனர்" என்றார்.

திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசுகையில் "இளைஞர்கள் தற்போது விழிப்புணர்ச்சியு டன் செயல்படுகின்றனர் என்றும், இதற்குக் காரணம் தரப்படுத்தல், உத்தியோகத் துறையில் பாரபட்சம் முதலிய வற்றால் அவர்கள் விரக்திய டைந்துள்ளதேயென்றும், தம்பி சிவகுமாரன் பிறந்த இம் மண் ஒரு புனிதத் தன்மை பொருந்தியது என்றும் கூறி, கோப்பாய்த் தொகுதி வாழ் மக்கள் திரு. எஸ். கதிரவேலுப் பிள்ளையை அமோக வெற்றி பெறச் செய்வார்கள் என நம்பு வதாகத் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் திரு மு. திருநாவுக்கரசு, பொன்சத்திய சீலன், திரு. குணராசா ஆகியோ ரும் பேசினர். (கு.அ)

### முழங்காவிலில்

## விவசாயத்திற்குப் போதிய நீர் பெறும் வாய்ப்புண்டு

உடுப்பிட்டி, திங்கள் முழங்காவில் பகுதியில் பூமியின் அடியில் இருந்து குழாய் மூலம் நீர் பெறுதலை விருத்தி செய்யும் சாத்தியக் கூறு பற்றி நீர்ப்பாசனத் திணைக்களம் ஆய்வுகளை நடாத்தியுள்ளது.

இங்கு பரீட்சார்த்தமாக ஆறு குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு நடாத்திய ஆய்வுகளின் போது இப்பகு தியில் விவசாய அபிவிருத்திக் குத் தேவையான அளவு அடி நீர்பெற முடியும் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி மிளகாய், வெங் காயம், தக்காளி, தானிய வகை போன்ற உபஉணவுப் பயிர்களுக்குப் பொருத்த மான சிவந்த மண்ணைக் கொண்டுள்ளது. இங்கு தோண்டப்படும் ஒவ்வொரு குழாய்க் கிணறும் 20 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி அளிக்கக் கூடியது.

இந்தக் குழாய்க் கிணறு கள் மூலம் பெறப்படும் அடி நீர்வளத்தைப் பயன்படுத் திச் சில ஏக்கர் நிலத்தை உணவுற்பத்தித் திட்டத்தின் கீழ் கொண்டு வரும் நோக் கத்துடன் இப்பகுதியில் உள்ள இளைஞர்களுக்கெனப் பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் சில ஆரம்பிக்கப்பட உள்ளன.

நீரின் தரத்தினதும் மீள நிரப்பப்படும் நீரின் விகிதத் தினதும் பொருட்டு இக் குழாய்க் கிணறுகள் செயற் படுவதை அவதானித்து இத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

### நூல் விமர்சனம்

#### கலாவல்லியும் நட்சத்திரமாமாவும்

இரண்டு சஞ்சிகைகள் ஒரே சமயம் கிடைத்தன. பிரித்துப் பார்த்தேன் ஆச்சரியமாக இருந்தது. முகப்பைப்பார்த்து ஆச்சரியத்தில் மூழ்கியது போக உள்ளே இருந்த விஷ யங்களைப் பார்த்து மூக்கின் மேல் விரலை வைக்கத்தோன்றி யது. காரணம்?

இரண்டு சஞ்சிகைகளுமே நம்நாட்டில் வெளியாகியவை. எல்லா வகையிலும் தமிழ் நாட் டிலிருந்து வரும் பிரபல்யமான சஞ்சிகைகளுக்கு நிகராகக் காணப்பட்டன.

அடங்கியுள்ள விஷயங்கள் மட்டுமல்ல 'படங்கள்' தலைப்புக் கள் யாவும் நம்மைப் பிரமிப் பில் ஆழ்த்தக் கூடியனவாய் இருக்கின்றன. வசதிகளும் சாதனங்களும் இருந்து விட் டால் நம்மவர்கள் எவ்வளவு திறமாக காரியங்களை செய்து காட்டுவார்கள் என்பதற்கு இச் சஞ்சிகைகள் இரண்டும் எடுத்துக்காட்டுகள் எனலாம்.

பலவண்ணங்கள் கொண்ட முகப்பு அட்டை மட்டுமல்ல உள்ளேயும் கதைகட்டுரைக ளுக்குபொருத்தமான படங் கள் போதாதா!

தமிழ்நாட்டிலிருந்து சஞ் சிகைகளில்லையே என்று ஏங்கு பவர்களின் ஆசையை நிச்சயமாக இவை பூர்த்தி செய்யும் என்பதில் சந்தேக மில்லை

இரண்டுமே கொழும்பு மெய் கண்டான் அச்சகநிறுவனத் தினரால் வெளியிடப்படுபவை கள் ஒன்று கலாவல்லி ஆனி இதழ். இதன் ஆசிரியர்: திரு. குமரகுருநாதன். மற்றது நட்சத்திரமாமா சிறுவர்களுக் கான சஞ்சிகை யூன் இதழ். இதன்ஆசிரியர் கே. என். ஆர் அருள்சோதிநாதன்.

இருசஞ்சிகைகளுக்குமே நல்ல வரவேற்பு இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. —வர்ணம்

## "யாழ். தொகுதியில் போட்டியிட முதல் ஏன்நான் விரும்பவில்லை?"

### டாக்டர் ஏபிரகாம் விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்.

"கூட்டணியோடு நான் ஒத் துழைக்கவில்லை என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் திரு. மு. சிவசிதம்பரம், அ. இ தமிழ்க் காங்கிரஸ் (செயற்குழு) உறுப் பினராகிய என்னிடம் கூறிய தில்லை. கூட்டணிக்கிளைகளை யாழ்ப்பாணத்தில் அமைத்து இயக்கச்சொன்னதுமில்லை"

இவ்வாறு யாழ்ப்பாணம் சுயேச்சை வேட்பாளர் டாக் டர் ஏ. எல். ஏபிரகாம் ஈச்ச மோட்டை வீதியில் திரு. கே. செபஸ்தியாம்பிள்ளை தலைமை யில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப் பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகை யில், "திரு. மு. சிவசிதம்பர மும், திரு வி. தருமலிங்கமும் என்னை ஒரு போதுமே சேர்ந்து சந்திக்கவில்லை. திரு தருமலிங் கம் மட்டுமே தனிப்பட்ட முறையில், தனிப்பட்ட பிரச்னைகளின் நிமித்தம் சந் தித்தார் திரு. செல்லத்தம்பு மட்டுமே எனது உறவினர் ஒருவர் மூலமாக என்னை யாழ். தொகுதியில் போட்டியிடமுடி யுமா என்று கேட்டனுப்பி இருந்தார். அந்தவேளை அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் உயி ரோடிருந்தகாலம். அமரர் செல்வநாயகம், உயிரோடு இருந்த காலத்தில் திரு. அமிர் தலிங்கத்தைகாங்கேசன்துறை யில் போட்டிபோடவிருப்பமா என்று கேட்டிருந்தால் என்ன நிலை ஏற்பட்டிருக்குமோ அதே நிலைதான் எனக்கும் இருந்த தால் நான் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட மறுத்தேன்" என்று கூறினார். (கூ-அ)

## இன்று

### பண்ணிசைக் கச்சேரி

யாழ்ப்பாணம், செவ்வாய் பூநகரி விநாயகர் ஆலய கும்பாபிஷேக தினமாகிய இன்று பண்ணிசைக் கலாநிதி எஸ். கே. சிவபாலனின் பண்ணிசைக்கச்சேரி நடை பெறவுள்ளது. (அ)

57-வது நாள்
ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
தபால்காரன் தங்கை

லிடோ போன்: 7693
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்) (புதிய பிரதி)
ஜெய்சங்கர் நடித்த
வல்லவன் ஒருவன்

சாந்தி
இப்பொழுது நடைபெறுகின்றது!
யாழ். நகர் தினசரி 4 காட்சிகள்
போன்: 7642
10-30, 2-30, 6-30, 9-45
★ அசோகன் ★ சந்திரகாந்தா
★ விஜயன் ★ வசந்தா நடித்த
கார்த்திகைதீபம்
(புதிய பிரதி)
அடுத்தவெளியீடு!
☆சிவாஜி ☆ சரோஜாதேவி ☆ எம். ஆர். ராதா
இருவர் உள்ளம்

REGAL (JAFFNA)
Daily: 4-45, 7-00 & 9-30 p. m. only
Dicing with Danger, Pulse Tingling Thrill - A-Minute Adventure in a Devil May care world of Cavier, Rubbling Champagne, Eye-Catching Girls... and Ruthless Crooks.
Tony Curtis - Roger Moore - Susan George
in
"Mission Monte Carlo"
(Action Packed Film)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி
மற்றும் பலர் திறம்பட நடித்த
ஈழத்திரையோவியம்
ஜெயேந்திரா மூவீஸ்
காத்திருப்பேன் உனக்காக

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி (இருவேடங்களில்) நடித்த
மனிதனும் தெய்வமாகலாம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்)
53-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின்
திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்குசெய்து கொள்ளலாம்.


### வாலகம்பாகு குளம் மூலம்

# $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கர்வயல்களில் உச்சஅளவு பயன் ஆய்வு

உடுப்பிட்டி, திங்கள்

வாலகம்பாகுக் குளத்திட்டத்தின் மூலம் உலர்வலய, ஓரளவு நீர்ப்பாசன வசதியுள்ள நெல்வயல்களை உச்ச அளவுக்குப் பயன் படுத்துவதற்கான பரிசோதனையைக் கமத்தொழிற் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டம் ஆரம்பத்தில் இரு வருடங்களுக்குத்தொழிற்படும் என்றும், இத்திட்டத்திற்குக் கமத்தொழிற் திணைக்களம் 7,00,000 ரூபாவையும், சர்வதேச அபிவிருத்தி நெல் நிலையம் 200,000 அமெரிக்க டாலர்களையும் முதலீடுசெய்துள்ளன என்றும் கமத்தொழிற்பணிப்பாளர் திரு. ஏனெஸ்ற் அபயரத்ன தெரிவித்துள்ளார்.

வாலகம்பாகுத்திட்டம்பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில் 'நாம் இதுவரை விவசாயத் தொழில் முறைகள்பற்றியும் அவ்விவசாயத் தொழில் முறைகளைப் பயன் படுத்தித் தனியொரு பயிரின் உற்பத்தியைப் பெருக்குவதிலும் ஆர்வம்காட்டி வந்தோம். இத்திட்டத்தின் மூலம் பல்வேறு மூலவளங்களையும் ஒன்றிணைத்து அவற்றின்மூலம் உச்சப்பயனைப்பெறுவதற்கு முயற்சிக்கின்றோம். இம்மாதிரியான திட்டமொன்று முன்னொருபோதும் கமத்தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவில்லை' என்று சொன்னார்.

உலர் வலயத்தில் காணப்படும் ஓரளவு நீர்ப்பாசன வசதியுள்ள வயல் நிலங்களுக்கு எடுத்துக் காட்டாக வாலகம்பாகுக்குளப் பகுதியில் 2,50,000 ஏக்கர்கள் காணப்படுவதினாலேயே இப்பகுதி பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தை இதன் தொடர்பு அதிகாரியான கலாநிதி வோல்ரர் பெர்னண்டோ, பிரதிப்பணிப்பாளர், பயிர்ச் செய்கை ஆராய்ச்சி உதவியே கத்தர் திரு. மேவின் சிகுருஜபதி, மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. பேஸ்லி ஜினேந்திரதாசா ஆகியோரது உதவியுடன் செயற்படுத்துவார்.

(உடு. அ)

## தமிழ்ஈழம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கொண்டுள்ளனர். இது தமிழ்ஈழம் இடைப்பதற்கான முதல் அறிகுறியாகும். தமிழ் மக்கள் சிங்களக் கட்சிகளை நம்பி தங்கள் பிரச்னைக்குத் தீர்வுகாணமுடியாது என்ற உண்மையை தமிழ் மக்கள் உணர்ந்துவிட்டார்கள். தன்னாட்சித் தமிழ்ஈழம் தவிர இம்மியளவும் குறைவான வேறு எந்தவொரு மாற்றுத் திட்டத்தையும் தமிழர்விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொள்ளாதென்பதை உறுதியாகக் கூறிவைக்க விரும்புகின்றோம்" என்று கூறினார். (கா)


2-வது வாரம்
நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி—விஜயா நடித்த
தங்கப்பதக்கம்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் — ஜெயலலிதா
கணவன்

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30
முத்துராமன் — சுஜாதா
வாழ்ந்து காட்டுகிறேன்

RIO (Jaffna)
Daily 4 Shows
Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
ANTHONY QUINN
in
Savage Innocents


## வன்னேரி-யாழ். மேலதிக பஸ் சேவை

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சியை அடுத்துள்ள வன்னேரிக் குளத்திற்கு இவ்வாரம் தொடக்கம் கிளிநொச்சி இ. போ. ச. டிப்போ ஒரு மேலதிக பஸ் சேவையை ஏற்படுத்தியுள்ளது.

வன்னேரிக்குளத்தில் இருந்து கிளிநொச்சி ஊடாக யாழ்ப்பாணத்துக்கும் – யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி ஊடாக வன்னேரிக்குளத்துக்கும் இந்த மேலதிக பஸ்சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் வன்னேரிக்குள மக்களின் பிரயாணக் கஷ்டம் ஓரளவு தீர்ந்துள்ளதாக ஒரு பிரயாணி நமது நிருபரிடம் கூறினார். (அ)

# 'சுதந்திரமாக வாழ பிரிந்துபோவதே வழி'

**- வி. ஆனந்தசங்கரி**

கிளிநொச்சி, திங்கள்

"பல ஆண்டுகளாக இந்த நாட்டில் வாழும் தமிழ்மக்களை சிங்கள ஏகாதிபத்தியம் அடுக்கடுக்கான கொடுமைகளை-நியாயமற்ற போக்கினைத் திணித்த காரணங்களாலே இன்று தமிழ்மக்கள் சுதந்திரமாக வாழ பிரிந்துபோவதே வழி என்பதனை உணர்ந்து "தமிழ்ஈழக் கோரிக்கையின் பேரிலும், இலட்சியத்தின் அடிப்படையிலும் தமிழர்விடுதலைக்கூட்டணி இன்று ஒரு சர்வஜன வாக்கெடுப்பினை எதிர்நோக்கி நிற்கிறது."

வட்டக்கச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணி தேர்தல் பிரசாரக் கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு பேசியதமிழர் விடுதலைக்கூட்டணி கிளிநொச்சித் தொகுதிவேட்பாளர் திரு. வி. ஆனந்தசங்கரி கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: 1972ம் ஆண்டு ஆட்சியாளர்கள்புதியஅரசியல்சட்டமொன்றினை உருவாக்கித் தமிழர்களை தமிழர் தம் நாட்டில் நிரந்தர அடிமைகளாக்க நடவடிக்கை எடுத்தபோது, தந்தை செல்வாவின் வேண்டுகோளை ஏற்று தமிழ்மக்களின் அரசியல்கட்சிகள் அனைத்தும் ஒன்றுகூடி தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கி இன்று ஒரு இலட்சியத்தின் அடிப்படையில் தேர்தலில் நிற்கிறது.

"சிங்களமக்களுடன் தமிழ் மக்கள் தொடர்ந்து ஒற்றுமையாக வாழமுடியாது, என்ற மாற்றமுடியாத முடிவு தமிழர் கூட்டணியை தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாற்றியது".

திருவாளர்கள் பா. வை. ஜெயபாலன், ஐ. திருஞானம், இ. கிருஷ்ணராசா உட்படமற்றும் பலர் பேசினர். (க)

"கூட்டணியில்

# நான் சேர்ந்தால் அவர்கள் வேறு'அணியில்சேர்வார்கள்'

**- வி. குமாரசுவாமி**

கொடிகாமம், திங்கள்

"தமிழர்விடுதலைக்கூட்டணியினர் என்னையும் தங்களுடன் வந்துசேரும்படி கேட்கின்றனர். நான்கூட்டணியில்சேர்ந்தால் அவர்கள் வேறுஅணியில் போய் சேர்ந்துவிடுவார்கள்."

சாவகச்சேரி டச்சு வீதியில் ஜி. ஜி. காங்கிரஸ் அபேட்சகர் திரு. வே. குமாரசாமியை ஆதரிக்கும்முகமாகதிரு. சு. அரசரத்தினம் தலைமையில்நடைபெற்ற கூட்டத்தில் திரு. வே. குமாரசாமி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் கூட்டணியில் சேர்ந்துவிட்டார் என்றும், தமிழ்காங்கிரஸ் கூட்டணியில் இணையும்தீர்மானத்தில் ஜி. ஜி. கையெழுத்திட்டுள்ளார் என்றும், கூட்டணியினர் கூறிவருகின்றனர்.

"ஜி. ஜி. கூட்டணியில் சேர்ந்திருந்தால் 1972 முதல் 76வரை கூட்டணியை ஆதரித்து அறிக்கை விட்டாரா? தமிழ்க் காங்கிரஸ், கூட்டணியுடன் இணையும் தீர்மானத்திற்கு ஜி. ஜி. கையெழுத்திட்டிருந்தால் கூட்டணியினர் அத்தீர்மானத்தை பகிரங்கமாகவெளியிடுவார்களா? தலைவர் ஜி. ஜி. என்றுமே கூட்டணியை ஆதரித்ததில்லை."

திருவாளர்கள் ஏ. தில்லைநாதன், வி. பரமசாமி, ஆர். சந்திரன் ஆகியோரும் பேசினர்கள். (க)

## வட்டுத்தொகுதி ஐ. தே. க. கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செவ்

வட்டுக்கோட்டைத்தொகுதியில் ஐக்கியதேசியக்கட்சி சார்பில் போட்டியிடும் திரு. என். இரத்தினசிங்கத்தை ஆதரித்து அவரது இல்லத்தில் முன்னாள் விவசாயப்படை ஊழியர்சங்க வடபிராந்திய அமைப்பாளர் திரு. என். விசுவநாதன் தலைமையில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது.

தொகுதியின் பல இடங்களிலும் கட்சிக்கிளைகளை ஆரம்பிப்பதென்று இக்கருத்தரங்கில் முடிவு செய்யப்பட்டது.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் மேற்படிசங்க அமைப்பாளர் திரு. எஸ் கனகரத்தினம் ஏற்பாடு செய்திருந்த இக்கருத்தரங்கில் ஊர்காவற்றுறை ஐ. தே. க. வேட்பாளர் திரு. ம. அமிர்தலிங்கம், யாழ். தொகுதி பிரதம அமைப்பாளர் திரு. பி. கனகசபாபதி, ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்கள். முன்னாள் விவசாயப்படை ஊழியர்சங்க அங்கத்தவர்களும் பலகட்சி ஆதரவாளர்களும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர். (இ)

ஈழநாடு
The EELANADU

## "கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனம் இன்னும் வெளிவரவில்லையே"

யாழ்ப்பாணம், செவ்வாய்

"யாழ்ப்பாணத் தொகுதி மக்களின் வீடில்லாப் பிரச்னை, வேலையில்லாப் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதும், தொழிற் சாலைகளை உருவாக்கி இப் பகுதியின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதுமே என் நோக்கமாகும்'' என்று கொழும்புத்துறையில் நேற்று நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடும் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர் திரு. ஜி.ஜி.பொன்னம்பலம்கூறினர்

முன்னுள் மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. வே. நடராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. ஜி.ஜி.பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

"மக்களுக்குரிய உதவிகளைப் பெற்றுத்தராதவர்கள் மக்களுக்கு ஏன் சேவை செய்ய வேண்டும்? இனம்தான் பெரிதென்று கூறிவிட்டுப் பொருளாதார நலன்களைப் புறக்கணிப்பதா? மக்களால் தெரியப்பட்ட ஒருவர் தனது இனத்தை முன்னேற்றுவிப்பதற்காகப் பாடுபடுவதோடு, பொருளாதார நலன்களையும் பெற்றுக்கொள்ள உழைக்க வேண்டும்.

"தமிழ் ஈழக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத திரு. செல்லச்சாமியின் மேடையில் கூட்டணியினர் பிரசாரம செய்கின்றனர். ஆனால் இ. தொ. க. உறுப்பினர்கள் யாராவது தமிழ் ஈழத்துக்கு ஆதரவாகக் கூட்டணி மேடைகளில் பேசியுள்ளனரா?

"தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியினரின் கோரிக்கைகளைச் சகிக்கமுடியாத காசி ஆனந்தன் தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சிகளைக் கலையுங்கள்; கூட்டணி ஒன்றே போதும் என்ருர். அவர் இப்பொழுது தமிழரசுக்கட்சி வேட்பாளராக வீடு சின்னத்தில் போட்டியிடுகிருர்.

இந்தத் தேர்தல் சர்வசன வாக்கெடுப்பு என்று சொல்கின்ருர்கள்; அப்படியாளுல் நாட்டிலுள்ள தமிழர்களும் கூட்டணிக்கு ஆதரவாக வாக்களிக்கவேண்டும். பெரும்பான்மையாக வடக்கு கிழக்கிற்கு வெளியில் உள்ள தமிழர்களின் அபிப்பிராயத்தைப் பெறக் கூட்டணி என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? இவர்கள் சொல்லும் சர்வசனவாக்குரிமைக்கு எத்தனை சதவித வாக்குகள் விழவேண்டும் என்பது கூறுவார்களா?

தேர்தல் நடக்க மூன்று வாரங்களே உள்ளன. ஆனல் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் முழுமையாக இன்னும் வெளிவரவில்லை.''

திருவாளர்கள் ஆர்.ஈ.ஆனந்தராசா, தி. மகேந்திரன், கா. யோகசாமி ஆகியோரும் உரையாற்றினர்.

# "ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் குமாரரையே ஆதரிக்க வேண்டும்"

## பிரசாரக் கூட்டத்திற்கு தலைமைவகித்து சுதந்திரக்கட்சிப் பிரமுகர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

'யாழ்ப்பாணத்தொகுதியிலுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கே தங்கள் வாக்குகளை அளித்து ஆதரவளிக்கவேண்டும்' என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகரும் யாழ். மாநகர சபையின் முன்னுள் விசேஷ ஆணையாளருமான திரு. வே. நடராசா கொழும்புத்துறையில் திரு. ஜி. ஜி. (குமார்) பொன்னம்பலத்தை ஆதரித்து நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கேட்டுக்கொண்டார்,

அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரின் ஆலோசனையின் பெயரில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மேலிடத்தின் அனுமதியோடு தான் இந்தக்கூட்டத்துக்குத் தலைமை வகிப்பதாகவும் திரு. நடராசா தெரிவித்தார்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நடராசா தமது தலைமையுரையில் மேலும்குறிப்பிட்டதாவது;

"தமிழ்ஈழம்பெற்று பெரும்பான்மையினரின் அடிமைகளாக நாம் வாழப்போகின்ருேமா? அல்லது சுதந்திரஇலங்கையின் மக்களாக சுதந்திரமாய் வாழவிரும்புகின்ருேமா? உலகெங்குமே சிறுபான்மையினர்பெரும்பான்மையினரால் அடக்கப்படுவது இயல்பு. அதுபோல தனிநாட்டிலும் கத்தோலிக்கர், புரட்டஸ்தாந்தர், சிறுபான்மைத் தமிழ்மக்கள், முஸ்லிம்மக்கள் சிறுபான்மையராகி இன்று சிங்களவரின் அடக்குமுறையில் தமிழர்கள் இருப்பதுபோலவே இருப்பர்''

### கூட்டணியினர் மீண்டும் நிற்பார்களா?

தமிழ்ஈழம் ஏற்படும் நிலையில் பண்டைத் தமிழர்கள் பலாத்காரத்திஞல் ஆண்டது போல, கூட்டணியினர் பலாத்காரத்தால் உங்களை ஆள்வார்கள். மக்களின் பசி, பட்டினி முதலியவைகளைத் தீர்க்காமல் தமிழ்ஈழம் அமைப்போம் என்கிருர்கள். தமிழ்ஈழம்அமைப்பதென்ருல் சிங்கள பாராளுமன்றத்திற்குக் கூட்டணியினர் போகத்தேவையில்லை. சர்வசன வாக்கெடுப்பில் கூட்டணியினருக்குத் தனிப்பெரும்பான்மை கிடைக்காவிட்டால் தங்களது எம் பி பதவிகளை நிராகரித்து திரும்பவும் திரும்பவும் தேர்தலுக்குநிற்பார்களா?

கூட்டணியினர் சிறுபான்மைத் தமிழர், முஸ்லீம்களுக்கு 50 : 50 கொடுக்கத் தயாரா? தன்னேடு கூட்டுச் சேர்ந்த தமிழ்க்காங்கிரசுக்கே விகிதாசார இடம் கொடுத்த தமிழர் கூட்டணி எப்படிக் கொடுக்கும்?

பெரும்பான்மைத்தமிழர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழ்கின்ருர்கள். அவர்களது சொத்துக்களும் அங்கேதான் இருக்கின்றன.

தமிழ்ஈழம் அமைத்தால் அவர்களது நிலைஎன்ன? தமிழ்ஈழத்திலுள்ள சிங்களவரின் நிலை என்ன? தமிழ்ஈழத்தில் உள்ள சிங்களவரின் நிலையென்ன அவர்களுக்கென்று 'சிங்களமொழி விசேடசரத்து' ஒன்று வரும். எனவே அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் சொன்னது போல தமிழன் பருத்தித்துறை தொடக்கம் காலிவரை தலைநிமிர்ந்து வாழ வேண்டும்.

இன்று ரெயிலில் மா, பெற்ரேல் வராவிட்டால் நாம் படும் கஷ்டம் எவ்வளவு? இதற்கு என்ன மாற்றுத் திட்டத்தைக் கூட்டணியினர் வைத்துள்ளனர்.

அரசாங்கம்விட்ட தவறிஞல் தான் தெற்கிலே சேகுவாரா இயக்கமும் வடக்குகிழக்கில் இளைஞர்பேரவையும் உருவாகியது. தரப்படுத்தலும் தமிழ் இளைஞர்களைத் தூண்டிவிட்டு விட்டது.

தமிழ்இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க கூட்டணி பாடுபடுமா? அப்படித் தொழில் வாய்ப்புகளை அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்தால்அவர்கள் கூட்டணியைப் பின் தொடரமாட்டார்கள் என்பதனுலும் தங்கள் பாராளுமன்றக் கதிரைகள் பறிபோய் விடும் என்பதற்காகவுமே இப்படிச் செய்கின்ருர்கள்''. [கூ]

# குமார்பொன்னம்பலத்துக்கு ஆலாலசுந்தரம் சவால்!

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழர் விடுதலைக் கூட்டணி தன்னை ஒரு வேட்பாளனுக நிறுத்தவில்லையென்று ஏதோவெல்லாம் சொல்லிவரும் திரு. குமார் பொன்னம்பலம் கூட்டணியிடம் தன்னை வேட்பாளனுக நிறுத்தவேண்டுமென்று கேட்டதற்குத் தனக்குள்ள தகுதிகள்பற்றி ஒரு பொதுமேடையில் என்னுடன் விவாதிக்க வருவாரா?

இவ்வாறு திரு. மு. ஆலாலசுந்தரம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கன்னுதிட்டி காளிகாதேவி ஆலயமுன்றலில் திரு. வெ. யோகேஸ்வரனை ஆதரித்து நடந்த பிரசாரக் கூட்டத்தில் சவால்விடுத்தார்.

திரு. க. ஜெயராம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ஆலாலசுந்தரம் மேலும் கூறியதாவது:

'சுமார் முப்பதாண்டுகளாக தமிழ்மக்களின் உரிமைக்காகப் போராடிவரும் இயக்கத்துடன் என்வாழ்வைப் பின்னிப் பிணைத்துக்கொண்ட நான் சென்ற தேர்தலில் நான் கேட்காமலே என்னைத் தேர்தலில் போட்டியிடப்பணித்துசொற்ப வாக்குகளால் தோற்றுப்போன போதும், இம்முறை என்னைத் தேர்தலில் நிறுத்தவில்லை என்பதற்காக எனது ஆதரவாளர்கள் என்னை வற்புறுத்தியும் நான் சுயேச்சையாகப் போட்டியிடவில்லை. தமிழினத்தின் ஒற்றுமை சிதறிவிடக்கூடாதென்பதற்காக இயக்கத்துக்காக இன்றும் உழைக்கிறேன். தேர்தலில் போட்டியிடுவதற்கு எனக்கு முழுத்தகுதியும் இருக்கிறது. ஆனல் தமிழ்மக்களின் எந்த இயக்கத்திலும் சம்பந்தப்படாமலிருந்த திரு. குமார் பொன்னம்பலம் தமிழர் விடுதலைக்கூட்டணி தன்னைத் தேர்தலில் நிறுத்தவில்லையென்று சுயேச்சையாகப் போட்டிக்கு நின்று ஏதேதோ காரணங்கள் சொல்கிருர். அவரைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு வேட்பாளராக நிறுத்தவேண்டுமென்று கேட்பதற்கு அவருக்கு என்ன தகுதி இருக்கிறது? இதுபற்றி திரு. குமார் பொன்னம்பலம் பொதுமேடையில் என்னுடன் விவாதிக்க வரட்டும்".

'1948-ம் ஆண்டு இந்தநாட்டிற்கு ஆங்கிலேயர்கள் சுதந்திரம் கொடுத்தபோது இந்த நாட்டில் தமிழினம் தனக்கும் சுதந்திரம் கிட்டிவிட்டதாகத் தான் நம்பியது. ஆனல் அதற்குப் பின்னர் இந்தநாட்டில் ஆட்சியுரிமையைப் பெற்றுக்கொண்ட சிங்கள அரசாங்கங்கள் இரண்டும் மாறிமாறி இந்தநாட்டின் ஆட்சியைக் கைப்பற்றி ஆண்டபோது ஒன்ருேடு ஒன்று போட்டிபோட்டுக்கொண்டு தமிழரின் உரிமைகளைப் பறிக்கமுற்பட்டன. இரண்டு ஆளும்வர்க்கங்களின் ஒரே நோக்கம் இந்த நாட்டில் தமிழினத்தை - அதன் சுதந்திரத்தையும், உரிமைகளையும் பறிப்பதன்மூலம் நிரந்தர அடிமை இனமாக்கவேண்டும் என்பதுதான்.. இதனுல் தான் இந்தநாட்டிலே அடுக்கடுக்காகப் பல இன்னல்களை அவர்கள் தமிழினத்திற்குச் செய்துவந்தார்கள்,

'1949-ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்திஞல் ஏற்படுத்தப்பட்ட சட்டத்திஞல் மலையக மக்களின் வாக்குரிமைகள் பறிக்கப்பட்டன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திட்டமிடப்பட்ட குடியேற்ற நடவடிக்கைகளிஞல் தமிழ்மண் பறிக்கப்பட்டது. இந்தநாட்டில் பண்டாரநாயக்கா அரசாங்கத்திஞல் தனிச்சிங்களச்சட்டம்உருவாக்கப்பட்டபோது அதனுல் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர் தான். இங்கு வாழுகின்ற தமிழனுக்கு மொழிப்பாதுகாப்பில்லை, கலை, கலாசாரத்தைப் பாதுகாக்கின்ற உரிமையில்லை.. ஏன் இந்தநாட்டில் தமிழன் உயிருடன் வாழுகின்ற உரிமையும் அற்றவனுகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிருன்.

"தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சியைத் தமிழினம் மறந்திருக்கமுடியாது. கோவிலுக்குச் சென்று வழிபாடு நடாத்தி விட்டுச்சென்ற இளம் வாலிபரான பரராஜா சொறிநாயைப் போல் சுடப்பட்டதற்குக் கேள்வி கிடையாது, புத்தளத்திலே நமது இஸ்லாமிய சகோதரர்கள் அவர்களது புனித மசூதியில் வைத்து அநியாயமாகச் சுடப்பட்டதற்கு இந்த அரசாங்கத்தில் எந்தவித விசாரணையும் கிடையாது ஆனுல் இந்த அரசுக்கும் சட்டதிற்கும் எதிராகப் பல கொலை, கொள்ளைகளைச் செய்த 'கேடி' மறுசிரா தூக்கி விடப்பட்டுச் செத்தானு அல்லது செத்தபின் தூக்கிவிடப்பட்டானு என்று அறிவதற்கு பல லட்சம் ரூபா செலவிலே விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டு நீதி விசாரணை தொடரப்பட்டது. இத்தனை கொடுமைகள் தமிழ் இனத்திற்கு இழைக்கப்பட்ட போது அதை எதிர்த்தவர்கள் நாம்!

நமது இயக்கம் தேர்தலுக்காக ஏற்படுத்தப்பட்ட இயக்கமல்ல. பள்ளி மாணவனுக பசைச்சட்டி தூக்கி சுவரெங்கும் சுவரொட்டிகளை ஒட்டிய காலத்தில் இருந்து இன்று மேடையிலே ஒரு பேச்சாளனுக பேசுகின்ற நாள்வரை 30 வருடங்களாக இந்த இயக்கத்தோடு பின்னிப்பிணைந்து வாழ்ந்து வருபவன் நான்!

## தமிழ்ஈழ—

(2ம் பக்கத்தொடர்ச்சி)

யாகக் கொண்டுள்ளமுஸ்லீம்களும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தங்களுடைய முழுமையான ஆதரவை தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும், திரு. செல்லச்சாமிக்கும் அளிக்க வேண்டும்.''

கொழும்பையும் மலைநாட்டையும் சார்ந்த ஏராளமான கலைமன்றங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் இம்மன்றங்கள் அனைத்தும் திரு. செல்லச்சாமிக்கு பூரண ஆதரவளிப்பதுடன் தொகுதியில் பிரச்சார வேலைகளில் தீவிரமாக ஈடுபடுவதென்றும் தீர்மானித்தன. (ம)

## மரண அறிவித்தல்
### வேலாயுதர் நாகேந்திரன்
(தொழில் அதிகாரி, யாழ்ப்பாணம்)

வேலாயுதர் நாகேந்திரன் காலமானர். இவர் புஷ்பத்தின் அருமைக் கணவரும், சசிகலா, மீரா, நிர்மலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கலாநிதி சிவநாயகம், பிரிட்டனிலுள்ள சிவகங்கைபாலன், சிவசத்தியசீலன், சிவராஜா, வைத்தியகலாநிதி சிவபாக்கியநாதன் (திருமலை), ராஜா (பி. சி. சி.), விக்னராஜா (அரசினர் நில அளவையாளர்), கிருஷ்ணதாசன் (பொலிஸ் அதிகாரி), மலர், ஞானப், யோகா ஆகியோரின் மைத்துனரும் கைதடியைச் சேர்ந்த நவரத்தினம் ஆசிரியரின் சகோதரரும், திருமதி தம்பையாவின் மருமகனுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 28-6-77 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு உரும்பராயில் நடைபெறும்.

6553 தகவல்: ராஜா, சிவராசா–உரும்பராய்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேலைவிதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as a News paper in Sri Lanka.